ilakku.org
# இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 290 | சனி, ஜூன் 08, 2024 | 14 பக்கங்கள்



## விலாங்கு மீன்களாக வலம்வரும் தமிழ் தேசிய கட்சிகள்
## கானல் நீராகுமா தமிழ் பொது வேட்பாளர் முயற்சி?

இரா.மயூதரன்



தியாகி பொன். சிவகுமாரன் அவர்களின் 50ஆவது நிறைவாண்டின் நினைவு சுமந்து...



## "மோடியின் ஆட்சிக்கு கடிவாளமிடப்பட்டிருக்கிறது"

இந்தியத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள்

தமிழில்: ஜெயந்திரன்



## ரஸ்யாவின் போர் வியூகங்களை நோக்கி அமெரிக்காவை திருப்பிய செங்கடல் சமர்

வேல்ஸில் இருந்து அருஸ்


© 2024 இலக்கு இணையம்

## ஐநா வதிவிடப் பிரதிநிதி கொக்குத் தொடுவாய் மனிதப்புதைகுழி பகுதிக்கு விஜயம்



இலங்கைக்கான ஐநாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் (Marc-André Franche) கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அமைந்துள்ள பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை கடந்த வியாழக்கிழமை(6) மேற்கொண்டுள்ளார்.

வடக்குக்கு விசேட பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ள ஐநா வதிவிடப் பிரதிநிதி இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் அகழ்வு பணிகள் இடம்பெற்று வரும் கொக்குத்தொடுவாய் மனித

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி விநாயகம் காலமானார்!



தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் மூத்த தளபதியான விநாயகம் என்று அறியப்பட்ட கதிர்காம சேகரம்பிள்ளை விநாயக மூர்த்தி (வயது 60) செவ்வாய்க் கிழமை(4) காலமானார்.

யாழ்ப்பாணம் – தென்மராட்சி – வரணியை சொந்த இடமாகக் கொண்ட இவர், புலம் பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்த நிலையில் நுரையீரல் புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார்.


தமிழீழ விடுதலை புலிகள் முன்னெடுத்த பல தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இவர் புலனாய்வுக்கு தலைமை தாங்கியிருந்தார். அத்துடன், பல புலனாய்வு போராளிகளை உருவாக்கியிருந்தார்.

கட்டுநாயக்கா விமான படைத்தளம் மீதான தாக்குதலில் இவரின் பங்களிப்பும் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள உடல் ரீதியாக பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் ஒன்று கடந்த வியாழக்கிழமை(6) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க இடம்பெற்ற குறித்த மருத்துவ முகாமானது கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்திய சாலையுடன் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து



ஏற்பாடு செய்திருந்தது. மருதம் மாற்றுத் திறனாளிகள் சங்கம் மற்றும் எகமுத்து ஆகிய மாற்றுத் திறனாளிகள் சங்கத்தை சேர்ந்த உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான கலந்துரையாடல்

இரணைமடு நீர்பங்கீடு தொடர்பான கலந்துரையாடலானது இரணைமடு விவசாய அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே இடம் பெற்றுள்ளது.




இந்த கலந்துரையாடல் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை (05) இடம் பெற்றுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 16.02.2024 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அனைத்துலக நீதிமன்றத்திற்கு எதிராக அமெரிக்காவில் தீர்மானம்

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் மீது பிடியாணை பிறப்பித்த அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளை தண்டிப்பதற்கான தீர்மானம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.



கடந்த செவ்வாய்க்கிழமை (4) அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையில் முன்வைக்கப்பட்ட இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக247வாக்குகளும், எதிராக 155 வாக்குகளும் கிடைத்துள்ளன. அமெரிக்காவின் குடியரசுக் கட்சியை சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் மற்றும் இஸ்ரேலுக்கு ஆதரவான ஜனநாயகக் கட்சியை சேர்ந்த 42 பேரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் பைடனின் கட்சி இந்த தீர்மானத்தை கொண்டுவராததால் பைடனின் கட்சியை சேர்ந்த பலர் அதற்கு எதிராக வாக்களித்துள்ளனர். காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களால் இது வரையில் 36000 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 18000 பேர் சிறுவர்கள், மேலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதுடன், இஸ்ரேலிய படையினர்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இந்தியா பலமானதாக இருக்கப்போவதில்லை முன்னாள் வெளிவிவகார அமைச்சர்

இந்தியாவில் புதிதாக பதவியேற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி மிகவும் கடுமையான நெருக்கடிகளை சந்திக்கப் போகின்றது என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் இந்திய தேசிய அபிவிருத்தி முற்போக்கு கூட்டணியின் முக்கிய உறுப்பினருமான சல்மான் குர்சிட் அலம்ஹறான் தெரிவித்துள்ளார்.


2014 மற்றும் 2019 போல் அல்லாது பா.ஜ.க பொரும்பான்மை பெறவில்லை. ஆட்சியமைப்



பதற்கு 30 ஆசனங்கள் அவர்களுக்கு தேவையாக உள்ளது. எனினும் தேசிய ஜனநாயகக் கூட்டணி

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறலாம் என எச்சரிக்கை



அண்மையில் ரஸ்யாவின் இசை நிகழ்ச்சி மண்டபத்தில் இடம்பெற்றது போன்று மிகவும் மோசமான தாக்குதல் ஒன்று அமெரிக்காவிலும் இடம் பெறவலாம் என அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்களில் ஒன்றான எப்.பி.ஐயின் தலைவர் கிறிஸ் தேபர் றே கடந்த புதன் கிழமை(5) தெரிவித்தள்ளார்.

ரஸ்யாவில் இடம்பெற்ற தாக்குதலில் 145 பெர் கொல்லப்பட்டதுடன், பல நூறுபேர் காயமடைந்திருந்தனர். செனட் சபை உறுப்பினர்களிடம் பேசும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தள்ளதுடன், புலனாய்வு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஐரோப்பிய மக்களின் சமூகவலைத்தளங்களை கண்காணிக்கும் தீர்மானம் தயராகின்றது

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் எல்லா மக்களினதும் சமூகவலைத்தள செயற்பாடுகளை கண்காணிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் படுவதாக ஜேர்மனியை தளமாகக் கொண்ட ரி-ஒன்லைன் என்ற ஊடகம் கடந்த செவ்வாய்க்கிழமை (4) தெரிவித்தள்ளது. 28 பக்கங்களைக் கொண்ட மிக இரகசியமான ஆவணம் தமக்கு கிடைத்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.




அந்த ஆவணத்தில் 42 பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களின் சுதந்திரம் குறைக்கப்படுவதுடன்,

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழ் பொதுவேட்பாளர் தமிழீழத் தேசியத்தை உலகிற்கு எடுத்தியம்புவதற்கு தேவை

**உருத்திரகுமாரன்**

*நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நான்காம் தவணைக்காலத்தின் முதலாவது தொலைத் தொடர்பு அமர்வு, ஜூன் மாதம் 1ந் திகதி நடைபெற்றது. அதில் சிறிலங்காவில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, இதில் பல உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். பேசியவர்களில் பொளரும்பான்மையோர் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள்.*



பிரதமர் பேசும்போது, 1972 அரசியல் அமைப்புச் சட்டத்திற்கோ 1978 அரசியல் அமைப்புச் சட்டத்திற்கோ நாங்கள் தமிழர்கள் பங்குதாரர்கள் அல்ல, அதற்கு நாங்கள் சம்மதமும் கொடுக்கவில்லை எனவே அது எங்களைக் கட்டுப்படுத்த முடியாது. கடந்த 14 வருடங்களாக பாராளுமன்றத் தேர்தல் என்றாலும் சரி, மாகாணசபைத் தேர்தல் என்றாலும் சரி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது அவையைக் கூட்டி அத் தேர்தல்களை எவ்வாறு எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு கருவியாகப் பாவிக்கலாம் என்ற அடிப்படையில் தான் நாங்கள் முடிவுகள் எடுத்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் இவ்வாறாகவேதான் இருந்திருக்கிறது. 1995 ஆம் ஆண்டு சந்திரிக்காவின் தேர்தலை தமிழீழ விடு தலைப் புலிகள் பகிஷ்கரிக்கவில்லை. 2005 இல் ரணில் விக்கிரமசிங்க எங்களிற்கு எதிராக சர்வதேச சதிவலைப் பின்னலை பின்னுவதன் காரணமாக அவர் ஜனாதிபதியாக வருவது தமிழர்களிற்கு நன்மை பயக்காது என்ற நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் எடுத்ததனர். சிறிலங்கா தேர்தல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு எப்போதுமே ஒரு உத்தி சார்ந்ததாகவே இருந்திருக்கின்றது. நாடுகடந்ததமிழீழ அரசாங்கம், அவ் அடிப்படையிலேயே சிறிலங்கா தேர்தல்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்து வந்திருக்கின்றது. இன்று மூன்றுதெரிவுகள் சிறிலங்கா தேர்தல் தொடர்பாக தமிழ்மக்களிடையே வைக்கப்பட்டுள்ளன.

**1- சிங்களத்துடன் பேரம் பேசி எமக்கு அதிக உரிமைகளை தருபவர்களை நாம் ஆதரிக்க வேண்டும்.**
**2- ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும்.**
**3- தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும்**

70 ஆண்டு கால அரசியல் வரலாறு, சிங்களத்துடன் எவ்வளவு பேரம் பேசினாலும், சிங்களம் எதனையுமே அமுல் நடத்தாது.

சிங்கள புத்திஜீவிகள் மாறிவிட்டார்கள் என்ற ஒரு கருத்து இன்றைக்கு முன்வைக்கப்பட்டது. முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்று இன்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றுவரை ஒரு சிங்கள புத்திஜீவியோ, ஒருசிங்கள அரசியல் தலைவரோ, ஒரு சிங்கள மாணவத் தலைவரோதாங்கள் செய்த பிழையை ஏற்றுக் கொள்ளவும் இல்லை, மன்னிப்பும் கேட்கவும் இல்லை.

"அறகளவில்" சிங்களவர்கள் போட்ட கோஷம் கோத்தபாய ஒருதிருடன் என்று, ஆனால் கோத்தபாய ஒரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# இந்தியத் தேசிய சனநாயக கூட்டணி ஈழத்தமிழரின் தேசிய பிரச்சனைக்கு உரிய ஆதரவு அளிக்குமா?

உலகின் மிகப்பெரிய சனநாயகத் தேர்தல் என்ற பெருமையைக் கொண்ட 8337 தேசியக் கட்சி வேட்பாளர்களும், 1333 மாநிலக்கட்சி வேட்பாளர்களும் தேர்தல் ஆணையகத்தால் அங்கீகரிக்கப்படாத 532 கட்சிகளின் 2580 வேட்பாளர்களும் சுயேட்சை வேட்பாளர்கள் 3915 பேரும் போட்டியிட்ட இந்தியாவில் கீழ்ச்சபை என்று சுருக்கமாகச் சுட்டப்படும் இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிவுகள் யூன் 4ம் நாள் வெளிவந்தது. இந்த முடிவுகளின் அடிப்படையில் மீளவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது பாரதிய ஜனதாக் கட்சியின் தனித்து ஆட்சியமைப்பதற்கான 272 பெரும்பான்மையை முன்னைய நாடாளுமன்றத்தில் இருந்த 303 இலிருந்து 240 ஆக இழந்த நிலையில், தனது தேர்தல் கூட்டணிக்கட்சிகளான சந்திபாபுநாயுடுவுடனான தெலுங்குதேசக்கட்சி மற்றும் நிதிஸ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதாதளக்கட்சி ஆகியவற்றுடன் கூடிய தனது இந்திய தேசிய சனநாயக கூட்டணியின் ஆதரவால் 290 ஆக உயர்த்தி, கூட்டாட்சி அமைக்கும் இந்தியாவின் பிரதமராக மூன்றாவது தடவையாக ஜூன் 9ம் திகதி முதல் தனது இந்தியப் பிரதமர் பதவியைத் தொடரவுள்ளார். இந்திய மக்களின் இறைமையின் சின்னமாக இந்தியாவின் பிரதமராக மீளவும் அடுத்த ஐந்தாண்டு காலத்துக்குப் பதவியேற்கும் மாண்பமை நரேந்திரமோடி அவர்களுக்கு "இலக்கு" ஆசிரிய குழுவும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நேரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்திய தேசிய சனநாயக கூட்டணியின் தோற்றத்துக்கு வித்திட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முன்னாள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் மற்றும் பால்தாக்கரே போன்றவர்களை இந்தியத் தேசிய சனநாயகக் கூட்டணியுடனான வெற்றியின் பின்னர் உரைநிகழ்த்தும் பொழுது நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். இந்நேரத்தில் ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினை குறித்த முன்னாள் இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டோசின் கருத்துக்களை பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தொடங்கியுள்ள புதிய ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்த முயல்வாராக இருந்தால் ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினைக்கான இந்தியாவின் அணுகுமுறையில் புதிய வெளிவிவகாரக் கொள்கையை அவரால் நடைமுறைப்படுத்த முடியும். இனமான உணர்வுள்ள தமிழகத்தில் வளர்ச்சியும் காண முடியும் என்பதை இலக்கு இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அத்துடன் இந்தியப் பிரதமர் அவர்கள் "ஆட்சியை நடத்த ஒருமித்த கருத்தே முக்கியம்-பெரும்பான்மையல்ல" என்ற முக்கியமான கருத்தைக் கூறியுள்ளார். இலங்கைத் தீவிலும் இந்தியப் பிரதமர் பெரும்பான்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காது எவ்வாறு முன்னாள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டோஸ் அவர்கள் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையை எவ்வாறு அணுகி ஈழத்தமிழர்களுடன் ஒருமித்த கருத்துடன் பயணித்தாரோ அவ்வாறு மீளவும் ஈழத்தமிழர்களுடன் ஒருமித்த கருத்து இந்திய மத்திய அரசுக்கு உருவாக பிரதமர் தனது ஆட்சியினை முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் வேண்டுகோளாக உள்ளது.

தமிழகத்தில் இந்தியத் தேசிய சனநாயகக் கூட்டணிக்கு ஒரு இடம் கூடக் கிடைக்காத நிலையிலும் 23 லோக்சபாத் தொகுதிகளிலும் 49 இலட்சத்து 18 ஆயிரத்து 303 ஓட்டுக்களை அது பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக வளர்ந்து வருகிறது என்று பிரதமரும் கருதுகின்றார். இதனால் இந்த வளர்ச்சிக்கு உதவியவர்களுக்கு ராஜ்ய சபை வழி அமைச்சுக்களும் அளிக்கப்படவும் கூடும். அதே வேளை தான் தமிழகத்தில் பாரதிய ஜனதா தளத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து முயற்சிக்கப் போவதாகவும் கூறியுள்ளார். இதன் வழி தமிழகத்தின் கரையாகவும் ஈழத்தமிழர்களின் கரையாகவும் உள்ள இந்துமாக்கடல் மேலான சமகாலத்தின் முக்கியத்துவத்தைப் பிரதமர் கருத்தில் கொண்டு செயற்படவுள்ளார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தியாவின் பாதுகாப்புக்கு இதனுடைய முக்கியத்துவமும் உலகறிந்த ஒன்று. இந்நிலையில் இந்துமாக்கடலின் தென்னிந்தியக்கரையின் நுட்பங்களையும் தட்பங்களையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக வாழ்வால் அறிந்து தங்களின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல தமிழகத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் கேரளா உட்பட்ட தென்னிந்திய மாநிலங்களின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் ஈழத்தமிழர்கள் சமகால வரலாற்றில் எவ்வாறு கேடயமாக விளங்கினர் என்பதை சமகால வரலாற்றை உண்மையுடனும் நேர்மையுடனும் ஆய்வு செய்யும் வரலாற்று ஆசிரியர்கள் நன்கறிவர். ஈழத்தமிழர்களின் இந்த முக்கியத்துவத்தை பிரதமர் அவர்கள் கவனத்தில் கொண்டு இந்தியாவின் மத்திய அரசில் காணப்படும் ஈழத்தமிழர் எதிர்ப்பு கொள்கை உருவாக்கப் போக்கை மாற்ற முயற்சிக்க வேண்டும் என்பது இலக்கின் முக்கியமான கருத்தாக உள்ளது.

இனித் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் இந்தியா கூட்டணியுடனான இணைப்புடன் நடைபெற்ற தேர்தலில் அனைத்து இடங்களிலும் 40க்கு 40 என்று மக்கள் தங்கள் ஆணையை வெளியிட்டுள்ளனர். இலக்கு உங்களின் இந்த வெற்றிக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இனஉறவுடன் தெரிவிக்கின்றது. இந்த வெற்றியை நெறிப்படுத்தியதில் திராவிட முன்னேற்றக்கழகம் தமிழகத்தின் தலைமைச் செல்நெறியாக விளங்கியுள்ளது. இந்நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இனத்துவ மொழித்துவ பண்பாட்டு உறவில் நாள்தோறும் திட்டமிட்ட இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு என்ற மூவகை இனஅழிப்புகளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் குறித்தும் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பால் இன்று வரை தண்டனை நீதிக்காகவும் பரிகார நீதிக்காகவும் போராடும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்காகவும் அதன் கடமைகளைப் பொறுப்புக்களை முன்னெடுப்பதற்கான செயல் திட்டங்களை அது முன்னெடுக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்து. சுருக்கமாகச் சொன்னால் ஈழத்தமிழர்கள் தங்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையினை ஏற்கும்படியான கோரிக்கையையே உலகெங்கும் பரவலாக முன்வைக்கின்றார்கள். இந்தக் கோரிக்கைக்கு மாநில அரசு என்ற முறையில் இந்தக் கோரிக்கை பிரிவினைவாதமல்ல இதற்கான சனநாயக ரீதியான முயற்சிகள் பயங்கரவாதமுமல்ல என்பதனையும் ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமை எந்த வகையிலும் இந்திய இறைமைக்கோ ஒருமைப்பாட்டுக்கோ எதிரானதல்லவென்பதையும் இந்தியளவிலும் அனைத்துலக அளவிலும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

இலங்கையில் அங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் தன்னலத்தின் அடிப்படையில் ஈழத் தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையை முன்னெடுக்காத அரசியலையே நடாத்துகின்றார்கள். இதற்கு உதாரணம் கடந்த வாரத்தில் தன்னைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் மூத்த ஆளுமையாகவும் உள்ள சம்பந்தன் அவர்கள் "ஈழத்தமிழர்கள் வெளியக தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்த வேண்டி வரும்" என அப்பட்டமான வரலாற்றுத் திரிபுவாதத்தை யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை அருகில் வைத்துக் கொண்டு கூறியுள்ளார். 1975 இல் தந்தை செல்வநாயகம் அவர்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தை விட்டு விலகித் தன்னாட்சிப் பிரகடனத்தைச் செய்தது முதல் இன்று வரை அரை நூற்றாண்டுகளாக ஈழத்தமிழர்கள் தங்களின் வெளியகத் தன்னாட்சி உரிமைக்கான அங்கீகாரமே தங்களுக்கான ஒரே தீர்வு என்று வரலாறு படைத்து நிற்பதைச் சம்பந்தர் கோஸ்டி மறைக்கிறது. இந்நிலையில் தமிழகமும் உலகெங்கும் வாழும் தமிழர்களும் இணைந்து ஈழத்தமிழரின் வெளியகத் தன்னாட்சி உரிமைக்கான குரலை ஓங்கி ஒலிக்க வைப்பதன் மூலமே ஈழத்தமிழர்களின் இருப்பையும் பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் உறுதி செய்யலாம். இதற்கு இந்தியப் பிரதமர் தனது மூன்றாவது ஆட்சியில் துணை செய்ய வைக்க அனைத்துத் தமிழரும் உழைக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**

# விலாங்கு மீன்களாக வலம்வரும் தமிழ் தேசிய கட்சிகள்
# கானல் நீராகுமா தமிழ் பொது வேட்பாளர் முயற்சி?

**பாகம் 1**

இரா.மயூதரன்

இலங்கையின் 9 ஆவது அரசு தலைவர் தேர்தலுக்கான காலம் அறிவிக்கப் பட்டாகியுள்ள போதிலும் அது நடக்குமா இல்லையா என்ற கேள்விக்கான விடைதேடும் முனைப்பில் சிங்கள தேசம் நாட்களை கடந்து கொண்டிருக்கையில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டில் தமிழ்த் தேசிய அரசியல் அணி சேருமா என்ற எதிர்பார்ப்பு கானல் நீராக மாறும் நிலைமாறு நிலையின் முடிவிடத்தை நோக்கி நகர்வது தெட்டத்தெளிவாக புலனாகிறது.



தமிழ் பொதுவேட்பாளர் விடயம் என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கோ தமிழர்களுக்கோ புதியனவல்ல என்பது தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் கண்டுபிடிப்பை கடந்த உண்மையாகும். வரலாற்றை வஞ்சகத்தனமாக வளைக்க முறபடும் எம்.ஏ.சுமந்திரன் போன்றவர்களை விட தமிழ்த் தேசிய அரசியற்பரப்பில் இருந்து 'சேம் சைட் கோல்' போடுபவர்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டியுள்ளது.

ஆயுத மௌனிப்பின் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது அதுசார்ந்திருககும் தமிழர்களுக்கானதாகவோ, தமிழர் தாயகத்தின் இருப்புக்கானதாகவோ அன்றி அவரவர்களை ஆட்டுவிக்கும் பொம்மலாட்டக்காரர்களது நலன்கள் சார்ந்ததாகவே மாறிவிட்டது. இந்த கையறுநிலையின் வெளிப்பாடாகவே தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் ஒரு பொதுப்புள்ளியில் இணையும் சந்தரப்பமாக தமிழ் பொது வேட்பாளர் விடயம் காணப்பட்டாலும் இன்றளவிலும் ஒன்றிணைய முடியாதுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் பிரதிபலிப்பாக, தாயகம் - தேசியம் - தன்னாட்சி உரிமை என்கின்ற தமிழர்களது உரிமை முழக்கத்தை முன்னிறுத்தியதாக தோற்றுவிக்கப்பட்ட, தோற்றம் பெற்ற கட்சிகள் எல்லாம் தேர்தல் அரசியலுக்குள் மூழ்கி நீச்சலடித்து வருகின்றமை காலக்கொடுமையாகும். இவ்வாறு கட்சி நலன்சார்ந்து தேர்தல்களை எதிர்நோக்கும் அவலநிலையில் இருந்து மாறுபாடாக இலங்கை அரசு தலைவருக்கான தேர்தல் களம் அமைந்துள்ளது.



இவ்வாறான பின்புலத்தில்தான் கட்சி நலன்களை கடந்து தேசமாக செயற்படுவதற்கான வழித்தடமாக இந்த பொதுவேட்பாளர் விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பான கருத்துகள் பல்வேறுபட்ட தளங்களிலும் பேசப்பட்டு வந்தாலும் தமிழர்களது நலன்சார்ந்து தேசமாக அதனை முன்னெடுப்பதென்பது இன்று வரை பெரும் சவாலானதாகவே உள்ளது.

வட கிழக்கு தழுவியதாக வலுவான சிவில் சமூக கட்டமைப்பு ஒன்று இல்லாதுள்ள வெறுமையில் அரசியல் கட்சிகளின் மேலாதிக்கம் தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்திலும் செல்வாக்கு செலுத்தி அதன் மைய இலக்கில் இருந்து வெகு தொலைவுக்கு இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

'எல்லோரும் ஒன்றிணைந்து கேட்டுக் கொண்டால் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட தயாராக உள்ளேன்' என தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண சபை முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் சில மாதங்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்து தமிழ் பொதுவேட்பாளர் கருத்தியலையே திசைதிருப்புவதாக அமைந்திருந்ததுடன் அதனை மையமாக கொண்டு ஊடகபரப்பில் ஏட்டிக்கு போட்டியான பதில்கள் வளர்ந்தனவே தவிர பொதுவேட்பாளர் விவகாரம் பின்னோக்கியே தள்ளப்பட்டிருந்தது.

நாட்கள்.. மாதங்கள்... உருண்டோடிவிட்ட இடைவெளியில் அவர் உள்ளிட்ட சில கட்சிகள் தனித்தும் சிவில் அமைப்புகள் என்ற பெயரில் ஒருபக்கமுமாக தமிழ் பொதுவேட்பாளர் விடயத்திற்கு உயிர்கொடுக்கப்பட்டு வருகிறது.

வட கிழக்கு தழுவியதாகவோ அல்லது மாகாணத்திலோ, அந்தந்த மாவட்டத்திலோ, பிரதேசத்திலோ உள்ள மக்களை வழிநடத்தும் இயலுமையுள்ளதாக எந்தவொரு அமைப்போ, தரப்போ இல்லாத வெறுமையில், வட கிழக்கில் சிவில் அமைப்புகள் எனும் பெயரில் இயங்கிவரும் தரப்பினர் இணைந்து வடக்கிலும் கிழக்கிலுமாக பல சுற்று பேச்சுகள், சந்திப்புகள், கலந்துரையாடல்கள் என ஆரவார முன்னெடுப்புபகள் இன்றுவரை தொடர்ந்து வருகின்ற போதிலும் பிரதான இலக்கின் வெகு தொலைவிலேயே குறித்த முயற்சிகள் ஊசலாடிக் கொண்டிருப்பதனை மறுத்துவிடமுடியாது.



இவ்வாறானபலசுற்றுஆரவாரமுன்னெடுப்புகளின்பயனாகதமிழ்பொதுவேட்பாளர்ஒருவரை நிறுத்துவது என்ற கூட்டு தீர்மானம் ஒன்றிற்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 15 ஆண்டுகால அவலத்தின் தொடர்ச்சியாகவே இதனையும் பார்க்க முடியும். தமிழ் பொது வேட்பாளர் என்ற குறியீட்டு விடயத்திற்குள்ளாக ஆழமாக ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நெடும்பயணம் காத்திருக்கையில் தமிழ் பொதுவேட்பாளரின் அவசியம் குறித்தான வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகவே பல மாதங்கள் கடந்து இன்றளவும் நீடித்து வருகிறது.

இந்நிலையில், அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் பங்கேற்று ஆற்றிய உரையில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துகள் அதன் அவலத்தின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஒரு வழிமுறையாக தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தை எடுத்தியம்பயமை அதன் மைய கருத்தியலோடு ஒன்றித்ததாக இருந்த போதிலும், 'நிறுத்தப்படும் தமிழ் பொதுவேட்பாளர் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்து எமது வரலாறு பற்றியும், எமக்கிழைக்கப்பட்ட அநியாயங்கள், இன்னல்கள், பாகுபாடுகள் பற்றியும் உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும்' என்று தெரிவித்தமை அதன் மைய கருத்தியலையே சிதைப்பதாகவே அமைந்துள்ளது.

தமிழ் பொது வேட்பாளராக முன்நிறுத்தப்பட போகும் நபர் குறியீடே அன்றி முக வசீகரம், ஜன வசீகரம், மும்மொழி ஆற்றல் என்ற அளவுகோலின் அடிப்படையில் தெரிவுசெய்யும் விடயமல்ல. இணைந்த வட கிழக்கில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்படும் பிரகடனத்தை முன்னிறுத்தியதாகவே தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்பதே பிரதான அம்சமாகும். இங்கு நிறுத்தப்படும் நபர் முக்கியமன்று. வெளியிடப்படும் கூட்டு பிரகடனத்தின் உள்ளடக்கமே மிக பிரதானமாகும்.



இதுவரை காலமும் தமிழர்கள் தேசமாக வெளிப்படுத்திய ஆணைகள் அனைத்தும் தமிழ்த் தேசிய தலைமைகளால் மடை மாற்றப்பட்டு மலினப்படுத்தப்பட்டுவிட்ட பின்னணியில் இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தத்தமது விருப்பத்துக்கேற்ப கைகாயளும் நிலையை தோற்றுவித்து இன்று அரசியல் தீர்வு விடயமானது பத்தோடு பதினொன்றாக புறமொதுக்கப்பட்டு அபிவிருத்தி கூப்பாடுகளுக்குள் ஆழப்புதைக்கப்படும் பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில் தான் மீளவும் தமிழர்கள் தேசமாக தமது நிலைப்பாட்டினை இடித்துரைக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

இவ்வரலாற்று பின்புலத்தில் தான் அரசு தலைவர் தேர்தலை தமிழ் பொதுவேட்பாளர் ஊடாக தமிழர்கள் எதிர்கொள்ளும் வரலாற்று தேவை உணரப்பட்டுள்ளது. ஆயுத மௌனிப்பிற்கு பின்னரான காலத்தில் அதற்கு முன்னர் அரசியல் அங்கீகாரம் பெற்ற கட்சிகள் கூட அதே மக்களினால் வெறுத்தொதுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ள கையறுநிலையில் வடக்கு கிழக்கு முகமாக தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற ஒருவரை தேடுவதென்பதற்கு அப்பால் சிந்திக்கவே முடியாத வரலாற்று வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் என்ற கசப்பான உண்மையை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அதையும் கடந்து இன்று ஒரு கட்சிக்குள்ளாகவே பல அணிகள் என்ற அரசியல் கலாசாரம் வேரூன்றியபிற்பாடு பிரபலம் ஒருவரைகண்டறிந்து பொதுவேட்பாளராக முன்னிறுத்தி அரசியல் அங்கீகரத்தை பெற்றுக்கொடுப்பதென்பது பொருத்தப்பாடுடையதொன்றாக இருக்காது. தமிழர் தேசாபிமான உணர்வோடு கொள்கைவழி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பாடசாலை இலவச உணவு திட்டமும் இன்றைய நிலையும் !!!

உயிர்களின் உரமாகவும் ஆரோக்கியத்தின் அச்சாணியாகவும் போசாக்கு அமைவதால், அடிப்படைத் தேவைகளில் அகில அளவிலும் உணவே முதன்நிலை முக்கியத்துவம் பெறுகிறது. ஆரோக்கியமான சமூகத்தின் ஆணி வேர்களாக சிறுவர்கள் இருப்பதனால், சிறுவர் போசணை மட்டத்தில் பன்மடங்கு நாம் கரிசனை கொள்ளவேண்டியது அவசியமாகும் . உடல் வளர்ச்சி, விருத்தி மற்றும் நோயெதிர்ப்பு சக்தி மேம்படுத்தலின் ஊக்கியாகவும், உயிரின் அடிப்படையாக பல்வேறு வகையான ஊட்டச்சத்துக்கள் அமைகின்றன. அவசியமான அளவோடு உட்கொள்ளப்படும் சமனிலை உணவுகள், ஆரோக்கிய வாழ்வின் அடித்தளமாக அமையும்.



மந்த நிலை போசணையானது, மாணவர்களுக்கு பலவீனமான உடல், பக்குவமற்ற உள விருத்தி, நிர்ப்பீடணக் குறைபாடும் இலகுவாக நோய்வாய்ப்படல் மற்றும் அறிவும் ஆளுமையும் மங்குதல் போன்றவற்றுக்கு வழிகோலும். போசணை குறைபாடு காரணமாக பிள்ளைகளிடையே ஹோர்மோன்களின் உற்பத்தி பலவீனமடைந்து நாளாந்த உடல் செயல்பாடுகளில் சோர்வு நிலை ஏற்பட அது வழிவகுக்கிறது. இவ்வாறான மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு போதிய அளவு நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளாமல் இருக்கின்ற அதேவேளை 2024 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 714 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான மனித வளம் இருந்தால் தான் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்பதை முதலில் யாவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.




அமெரிக்கா, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் உலக அளவில் மாணவர்களுக்கு போசணைத் திட்டத்திற்காக அதிகளவு நிதியை ஒதுக்கிடும் நாடுகளாக காணப்படுகின்றது. அதிலும் அமெரிக்காவானது ஒரு பிள்ளைக்கான உணவு போசாக்கு திட்டத்தில் ஒரு வேளை உணவுக்காக அண்ணளவாக 500/- பணத்தினை செலவீடு செய்கின்றது . இது எமது நாட்டின் ஒரு பிள்ளையின் உணவுத் திட்டத்திற்கான செலவீட்டுடன் ஒப்பிடும்போது 5 மடங்குக்கும் அதிகமாக காணப்படுகிறது.

**உங்களில் எத்தனை பேருக்கு தெரியும் ...?**

- **பாடசாலைச் சிறுவர்களுக்கான உணவு வழங்கும் திட்டம்**
- **உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் "கல்விக்கான உணவு நிகழ்ச்சி திட்டம்"**
- **"தூய பால் குவளை அல்லது பால் பக்கட்" ஒன்று வழங்கும் வேலைத்திட்டம்.**

என்பன எமது நாட்டின் மாணவர்களுக்காக கொண்டுவரப்பட்ட போசணை உணவு திட்டங்கள் என்று. பெரும்பாலானோருக்கு தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் இதில் உணவு வழங்கும் திட்டம் மாத்திரமே அனேகமான பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தத் திட்டமும் பின்தங்கிய சில பாடசாலைகளுக்கு கேள்விக்குறியாகவே இன்றும் காணப்படுகின்றது.

**கந்தசாமி தனஞ்சயன்**
4ம் வருடம், 1ம் அரையாண்டு
கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவன்.
கல்வி, பிள்ளை நலத்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

மாணவர்களுக்கு சிறந்த போசணைச்சத்து உணவுகள் வழங்கப்படாதவிடத்து அவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு ஏற்படுவதுடன் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவார்கள். போசணைக் குறைபாடுஇ மன நெருக்கடி, மனவளர்ச்சி குன்றுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது நாட்டில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய கல்வி கற்ற புத்திசாலி இளைஞர்களின் எண்ணிக்கை குறைவதற்கு வழிவகுக்கும். இவ்வாறான சூழ்நிலையானது உருவாகின்ற பட்சத்தில் எமது நாட்டில் சிறந்த கல்வி கற்ற சமுதாயத்தினை உருவாக்க முடியாத சந்தர்ப்பமும் ஏற்பட்டுக் கொள்ளும். இதனால் நாம் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டும் என்பது மறுக்க முடியாத நிதர்சனமாகும்.



இலங்கையில் 5 முதல் 19 வயது வரையிலான 410,000 பாடசாலையில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளும், 17.8 சதவீத ஆண் பிள்ளைகள் போசணைக் குறைபாடு காரணமாக எடை குறைவாக இருப்பதாக வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன்படி, நாட்டில் மொத்தமான 860,000 பாடசாலை மாணவர்கள் எடை குறைவாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

மேலும் உலகளவில் உடல் எடை குறைவினால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் வீதம், இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையில் உள்ளது.

அண்மைய ஆண்டுகளாக எமது நாடு எதிர்நோக்கிய பொருளாதார பிரச்சனைகளின் பின்புலத்தில் இப் பிரச்சனையானது மேலும் வலுவடைந்து மாணவர்களின் கற்றல் செயல்பாட்டின் பாதிப்பினை தீவிரமடைய செய்துள்ளது.

அண்மைய தரவுகளின் படி நோக்கும்போது எமது நாட்டினை பொறுத்தமட்டில் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை தவிர மிகவும் வறிய கோட்டிற்குள் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு பொருத்தமான முறையில் வளங்கள் சென்று அடையாத காரணத்தினாலும், திட்டங்கள் முறையாக அங்கு செயல்படுத்தப்படுவதில்லை என்பதினாலும் நகர்ப் புறபிரதேசத்தில் வசிக்கும் பிள்ளைகளின் கற்றல் செயல்பாட்டினை விட இவ்வாறான கிராமப் புறத்தில் வாழ்கின்ற மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை போசணை மட்டமானது பாதிப்படைய செய்துள்ளது.



பாடசாலை இலவச மதிய உணவுத் திட்டத்திற்கான நிதியை அரசாங்கம் கடந்த பொருளாதாரப் பிரச்சினைகள் நிலவிய காலப்பகுதிகளில் நிறுத்தியதால், தனது பிள்ளைகள் காலை பசியுடன் பாடசாலைக்கு செல்வதை தவிர்க்க இரண்டு வேளை உணவு உண்பதை தவிர்த்துள்ள பெற்றோரும் உண்டு.

இன்றைய காலப்பகுதியில் மிகவும் வறிய கோட்டின் கீழ் வசிக்கும் குடும்பங்கள் தமது அத்தியாவசிய தேவையே பூர்த்தி செய்ய முடியாத நிலைமைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி அவர்களின் கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது குறித்த பிள்ளைகள் கற்றல் செயல்பாட்டில் முற்று முழுமையான ஈடுபாட்டை வழங்க முடியாமல் போகின்ற நிலைக்கு தள்ளப்படுவதுடன் மாத்திரமன்றி அதனூடாக எதிர்பார்க்கின்ற கல்வி இலக்குகளை அடைவதிலும் தாமதம் ஏற்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

உண்மையைக் கூற போனால் நமது நாட்டின் தற்கால நிலைமையில் அத்தியாவசிய தேவைகளில் கல்வியா? உணவா? என்னும் தெரிவுப் பிரச்சினையை கீழ்த்தர வகுப்பு பெற்றோர்கள் எதிர்கொண்டுள்ளனர். நாட்டில் பெரும்பாலான கீழ்வகுப்பு பெற்றோர் இன்று தமது பிள்ளைகளை பாடசாலைக்கு தொடர்ந்து அனுப்புவதா அல்லது பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதா என்ற இரு பிரதான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். இந்த இரு தேவைகளையும் ஒரே சந்தர்ப்பத்தில் தெரிவு செய்து நிறைவேற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். மேலும் உயர் வகுப்பைச் சேர்ந்த குடும்பத்தினர் இந்த இலவச உணவின் தரம், சத்து போன்றவற்றை யோசித்து தங்களது பிள்ளைகளை உண்ண விடாமல் தமது வீட்டிலிருந்து உணவினை அனுப்பி வைக்கின்றனர். இதன் மூலம் இலவச

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தொலைநோக்கு பார்வையற்றவர்கள் பிரநிதிகளாக இருப்பது ஈழத்தமிழரின் சாபக்கேடு

Dr. முரளி வல்லிபுரநாதன்
சமுதாய மருத்துவ நிபுணர்

இந்த வாரம் பெலவத்தையிலுள்ள அமைச்சு கட்டிடத்தில் இடம்பெற்ற இந்த கூட்டத்துக்கு ஒரு பங்குதாரராக நானும் அழைக்கப்பட்டு இருந்தேன். கூட்டத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டைமான் தலைமை தங்கியதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் சித்தார்த்தன், அங்கஜன் மற்றும் சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கிளிநொச்சி விவசாயிகளைபிரதிநிதித்துவப்படுத்துவதாககுறிப்பிட்டுக்கொண்டு திரு சிவமோகன் என்பவர் இரணைமடுக் குளம் கிளிநொச்சி மக்களுக்கே சொந்தமானது என்றும் யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வழங்குவதற்கு தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு இருந்தார்.





அதையடுத்து நான் இரணைமடுக்குளத்தின் பிரதான நீரேந்தும் பகுதி வவுனியா மாவட்டத்திலும் குளத்தின் பெரும்பகுதி முல்லைத் தீவு மாவட்டத்திலும் இருப்பதனால் இரணைமடுக் குளம் கிளிநொச்சி மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தேன். மேலும் மருத்துவர் என்ற முறையில் குடிநீர் தேவைக்கு விவசாயத்தை விட முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன், மேலும் 1.3 மில்லியன் மக்கள் வாழும் வட மாகாணத்தில் 50% மேற்பட்ட மக்கள் யாழ் மாவட்டத்தில் வசிக்கும் நிலையில் அவர்களுக்கு அதிகரித்த நீர் தேவை இருக்கும் என்பதையும் சுட்டி காட்டினேன் .

அதற்கு பதிலளிக்க முடியாத சிவமோகன் சப்பைக்கட்டு நியாயமாக நீரை அருந்திய பின் விவசாயத்தினால் பெறப்படும் உணவை உட்கொள்வதாலேயே மனிதர்கள் உயிர் வாழ முடியும் என்று தெரிவித்தார். இந்த நிலையில் அமைச்சர் ஜீவன் தலையிட்டு மனித உடலில் 60% நீராக இருப்பதுடன் அதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது என்று தெரிவித்தார். இந்த நேரத்தில் மனிதன் நீர் இல்லாமல் 3 நாட்களே உயிர் வாழமுடியும் ஆனால் உணவில்லாமல் 3 வாரங்கள் உயிர் வாழ முடியும் என்று நான் தெரிவித்தேன்.

கூட்டத்தில் கலந்து கொண்ட எந்திரிகள் ஒவ்வொரு வருடமும் மழைக்காலத்தில் பெருமளவு நீர் குளத்தில் இருந்து வீணாக கடலுக்கு வெளியேறியதாகவும் நீர் தேக்கத்தின் கொள்ளளவை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் தேவையையும் யாழ்ப்பாண மாவட்ட குடிநீர் தேவையையும் தீர்க்க முடியும் என்று தெரிவித்து இருந்தார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு அங்கஜன் மற்றும் திரு சித்தார்த்தன் கிளிநொச்சி விவசாயிகளின் வாக்குகளை பெறுவதற்காகவும் அதே நேரம் யாழ்ப்பாண மக்களின் எதிர்ப்பையும் சம்பாதிக்க விரும்பாத நிலையில் உறுதியான கருத்துகளை தெரிவிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

தமிழரசு கட்சியின் தலைவராக வர விரும்பும் சிறிதரன் மாத்திரம் இரணைமடுக்குளம் விவசாயிகளுக்கே சொந்தமானது என்று தெரி வித்து மீண்டும் ஒரு தடவை தனது அரசியல் முதிர்ச்சி அற்ற தன்மையையும் அதே நேரம் தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்கு எதிரான கருத்துகளையும் வெளிப்படுத்தி இருந்தார். புலிகளின் காலத்திலேயே தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்காக இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடிநீரை மருதங்கேணியில் உள்ள கடல்நீரில் இருந்து நன்னீராக்கும் திட்டத்தின் மூலமாக பெறமுடியும் என்ற திரு சிறீதரனின் கருத்தை உடனடியாகவே வட மாகாண நீர் முகாமைத்துவ சபையின் முகாமையாளர் எந்திரி திரு பாரதிதாசன் அந்த திட்டத்தின் மூலம் பெறப்படும் 1 கன மீட்டர் நீருக்கு அதிக செலவாக 300 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று கூறி நிராகரித்து இருந்தது திரு சிறீதரனின் அறியாமையையும் துறைசார் நிபுணர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாத அவரது அகங்காரத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.

ஒருமித்த முடிவை எடுப்பதற்கு திரு சிவமோகனும் திரு சிறீதரனும் தடையாக இருந்த நிலையில் அமைச்சர் ஜீவன் 2 மாதங்களுக்குள் பங்குதாரர்களை கொண்ட குழுவொன்றை அமைத்து அவர்களின் அறிக்கையை பெற்று முடிவெடுத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக தெரிவித்தார்.



திரு சிவமோகன் அதையும் ஏற்றுக் கொள்ளாமல் வடமாகாணசபை இயங்கிய போது அதன் அமைச்சர் திரு ஐங்கரநேசனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு ஒன்று ஏற்கெனவே இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதற்கு எதிராக பரிந்துரைசெய்திருப்பதாக தெரிவித்தார். அப்போது முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் சுன்னாகம் ஒயில் பிரச்சினையில் மின்சார நிறுவனத்துக்கு சார்பாக செயல்பட்டு தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தது மாத்திரமல்லாமல் இரணைமடுக்குளத்திலும் போலிநிபுணர் குழு அமைத்து தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்கு எதிராக செயல்பட்டிருப்பதை அறிந்து கொண்டேன்.

இறுதியாக அமைச்சர் ஜீவன் திரு சிவமோகனிடம் அவர்களின் பிரநிதித்துவதுடன் குழு அமைக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கியதுடன் கூட்டம் முடிவடைந்தது.

தமிழர் தேசிய நலன்கள் தொடர்பான தொலைநோக்கு பார்வையற்றவர்கள் வாக்குகளை சேகரிக்கும் ஒரே நோக்கத்துடன் பாராளுமன்றத்தில் தமிழர் பிரநிதிகளாக இருப்பது ஈழத்தமிழரின் சாபக்கேடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் 2 தலைமுறைக்கு முன்னர் நெடுந்தீவு முதலானநீர்வளம் நலிந்த தீவு பகுதியில் இருந்து வந்து கிளிநொச்சியில் குடியேறியவர்கள் இன்று தம்மை கிளிநொச்சி விவசாயிகளாக அடையாளம் காட்டிக்கொண்டு தமது மூதாதையர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு குடிநீர் தர மறுப்பதை காலத்தின் கொடுமை என்று கூறலாமா?

• • •

# இளைஞர் வகிபாகம்

துரைசாமி நடராஜா

மலையகம் இன்னும் பல்வேறு துறைகளிலும் மேலெழும்ப வேண்டிய நிலையில் இதனை சாத்தியமாக்கிக் கொள்வதில் இளைஞர்களின் வகிபாகம் மிகவும் அவசியமானதாகும். இளைஞர்கள் பொறுப்புணர்ந்து செயற்படுவதன் ஊடாக மலையகம் பல சவால்களை வெற்றி கொள்ள முடியும் என்பதோடு மலையகத்தின் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்படும் என்பதனையும் மறுப்பதற்கில்லை.



சமூகஅபிவிருத்தியில் இளைஞர்கள் முக்கியத்துவம் மிக்கவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களால் தேசம் செழுமையடைகின்றது. பல பின்தங்கிய சமூகங்களின் அபிவிருத்தியில் இளைஞர்களின் ஆக்கபூர்வமான வகிபாகம் கை கொடுத்திருக்கின்றது என்பதனை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. உலக வரலாறுகள் பலவற்றையும் நல்லபடியாக மாற்றியமைத்த பெருமைக்குரியவர்களாக இளைஞர்கள் விளங்குகின்றனர். பாரதப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல தலைவர்கள் இளைஞர் சக்தி மீது அபார நம்பிக்கை கொண்டிருப்பதாக தெரியவரும் அதேவேளை அவர்களின் வெற்றியின் அச்சாணிகளாக இளைஞர்களே உரம் சேர்த்துள்ளனர் என்பதும் புதிய விடயமல்ல.

இந்த வகையில் இலங்கையின் இளைஞர்கள் குறித்து நாம் நோக்குகின்றபோது கடந்த சுமார் முப்பது ஆண்டுகள் மிகவும் சிக்கல் நிறைந்த காலப்பகுதியாகவே காணப்படுகின்றது. நாட்டின் தென் பிராந்தியத்தில் தோல்வியில் முடிந்த 1971 ம் ஆண்டு,1987 - 1989 ம் ஆண்டு காலப்பகுதி இளைஞர் கிளர்ச்சிகள், வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய நிலைமைகள், போர் நிலை போன்றவற்றால் ஆயிரக்கணக்கான இளைஞர்களை நாடு இழந்துள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எஞ்சியுள்ள இளைஞரிடையேயும் புதிதாக இளைஞர் பரம்பரையில் சேருவோரிடையேயும் இவை ஒருவித மனச் சோர்வையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளன.



இதன் விளைவாக அவர்களிடையே தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, இன ரீதியானதும் அரசியல் ரீதியானதுமான பாரபட்சங்கள், அரசியல் பழிவாங்கல்கள், இன-சாதி அடக்கு முறைகள், முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வதில் அவர்களுக்கு பங்கின்மை போன்ற சமூக, பொருளாதாரக் காரணிகள் அவர்களிடையே பொதுவானதொரு அமைதியின்மையை உருவாக்கியுள்ளதாகவும் வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

### கேள்விக்குறியாகும் எதிர்காலம்

இந்த வகையில் மலையக இளைஞர்கள் குறித்து நாம் நோக்குகையில் இவ்விளைஞர்களில் பலர் திறமைகள் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கு உரிய இடம் அரசியல் மற்றும் தொழிற்சங்கங்களில் வழங்கப்படவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு ஒன்று இருந்து வருகின்றது. இதில் உண்மை இல்லாமலும் இல்லை. தீர்மானம் மேற்கொள்ளும் பல முக்கிய இடங்களில் இளைஞர்கள் உள்ளீர்க்கப்படாத நிலையில் இளைஞர் தொடர்பான முக்கிய தீர்மானங்களை முதியோர்களே மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இது இளைஞர்களின் உரிமைகளை மீறுகின்ற ஒரு செயலாக அமைந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

பெருந்தோட்டப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அங்கு நிலவும் ஊதியப் பற்றாக்குறை, கம்பனியினரின் கெடுபிடிகள் போன்ற நிலைமைகள் இளைஞர் இடம்பெயர்விற்கு வலுசேர்த்து வருகின்றன. வருமான அபிவிருத்தி கருதி பல இளைஞர்கள் நகர்ப்புற தொழிற்றுறையை நாடிச் செல்கின்றனர். இங்கு இளைஞர்கள் பெரும்பாலும் கீழ்மட்ட தொழில்களிலேயே பெரிதும் ஈடுபட்டு வரும் நிலையில் கலாசார சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் சில இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதோடு, குடும்பத்திலும் இதன் தாக்கம் எதிரொலித்துள்ளது. நகர்ப்புற கீழ் மட்ட தொழில்களில் ஈடுபட்டு வரும் சில இளைஞர்கள் இளவயதில் திருமணங்களை மேற்கொண்டு எதிர்கால வாழ்க்கையை பாழ் படுத்திக் கொள்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய சில இளைஞர்கள் பெற்றோருக்கு பாரமாக தோட்டங்களில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



இதனிடையே பாடசாலையை விட்டு வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெளியேறுகின்றனர். இவர்கள் எதுவித தொழில் பயிற்சியும் இல்லாது கீழ்மட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையை மாற்றியமைத்து தொழில் ரீதியான தேர்ச்சியினை ஏற்படுத்தும் பொருட்டு மலையகத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் இளைஞர்கள் சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.

### காத்திரமான முன்னெடுப்பு

மலையக இளைஞர்கள் பல்வேறு திறமைகளும் ஆற்றல்களும் மிக்கவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் அவர்களை சரியான வழியில் திசைதிருப்புவது மிகவும் முக்கியமானதாகும். இதேவேளை மலையக அரசியல்வாதிகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் தேர்தல் காலங்களில் இளைஞர்களை அரவணைக்கும் அரசியல்வாதிகள் பின்னர் அவர்களைகைகழுவிவிடுவதாகவும், அவர்களின் அபிவிருத்திக்கு வலுசேர்ப்பதில்லை என்றும் பலமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனை கருத்திருத்தி மலையக அரசியல்,தொழிற்சங்கவாதிகள் இளைஞர்களின் அபிவிருத்தி கருதி காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு விசேட திட்டங்களை வகுத்து அரசிற்கு அழுத்தம் கொடுப்பதன் ஊடாக அவற்றை நிறைவேற்ற முற்படுதலும் அவசியமாகும்



இதேவேளை இந்த நூற்றாண்டு காலப் பகுதியிலாவது தோட்ட இளைஞர்கள் கல்வியிலும் தொழிற்றுறையிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும்,இதற்கென அவர்களை தயார்படுத்துவதும் மிகவும் இன்றியமையாததாகும். முறைசார்ந்த கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தோட்ட இளைஞர்கள் அவற்றின் நன்மைகளை அனுபவிக்கவும் தொடங்கிவிட்டனர்.

அவர்களது முன்னேற்றத்தின் அடுத்த கட்டமாக பல்வேறு துறைகளில் அவர்களது மனிதவள அபிவிருத்தி தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தி உள்ளனர். மேலும் தோட்ட இளைஞர்களின் மனிதவள தேவைகளை இனங்காணும் பொழுது இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு மட்டுமன்றி தோட்டங்களின் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள புத்திஜீவிகள், இவ்வாறான மனிதவள அபிவிருத்தி தேவைகளுள் சிலவற்றையும் அடையாளப்படுத்தியுள்ளனர்.




அவையாவன:-

தோட்டத்துறைக்கு வெளியே வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கு தேவையான வினைத்திறன்களை அவர்களிடையே

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# பலவீனமான இந்தியா பல இனங்களுக்கு சாதகமானது

ஆர்த்தீகள்

இந்தவருடம்உலகநாடுகளின்தேர்தல்ஆண்டாக அமைந்துள்ளது.. அதிலும் குறிப்பாக அமெரிக்கா, ரஸ்யா, பிரித்தானியா, இந்தியா, தென்னாபிரிக்கா, உக்ரைன், ஐரோப்பிய ஒன்றியம் என மிகவும் முக்கிய நாடுகளின் தலைவிதியை மட்டுமல்ல உலகின் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் அரசியல் மாற்றங்களாகவே இதனை பார்க்க முடியும்.





கடந்த வாரங்களில் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற தேர்தலில் ஆளும் கட்சி பெரும் பான்மையை இழந்து கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதும், மெக்சிகோவில் இடம்பெற்ற தேர்தலும் அந்த நாடுகளின் பொருளாதாரத்தில் கடுமையான சரிவை ஏற்படுத்தியிருந்தது. மெக்சிக்கோவின் பெசோ மற்றும் தென்னாபிரிக்காவின் றான்ட் ஆகிய நாணயங்கள் கடுமையான வீழ்ச்சியை கண்டிருந்தன. கோவிட்-19 காலத்தின் வீழ்ச்சியை விட அது அதிகமாகவே இருந்தது.

இந்தியாவின் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, இந்தியாவின் பங்குச் சந்தையும் கடந்த செவ்வாய்கிழமை(4) 6 விகித வீழ்ச்சியை கண்டதுடன் 10 பில்லியன் டொலர்களையும் அது இழந்திருந்தது. இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான கௌதம் அதானியின் பங்குச்சந்தை 25 விகித வீழ்ச்சியை கண்டிருந்தது.

இந்த ஆண்டு தாய்வான், பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் ரஸ்யா ஆகிய நாடு களிலும் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. ஆனாலும் இந்த வாரம் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் தான் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அதாவது அரசியலும் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளது அல்லது பொருளாதார நிறுவனங்களால் அரசியல் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதையே இது காட்டுகின்றது.



இந்த நிலையில் இந்தியாவின் தேர்தல் முடிவு என்பது ஆளும் பாரதிய ஜனதா கட்சி யின் தனித்துவமான ஆட்சி அதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அதாவது 2014 ஆம் ஆண்டுக்கு பின்னர் அது சந்தித்த மிகப்பெரும் தோல்வி இதுவாகும். அதாவது மோடி அலை ஒய்ந்துவிட்டது என்பதை மக்கள் தமது வாக்குக ளால் உணர்த்தியுள்ளனர்.




543 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 400 ஆசனங்களை கைப்பற்ற நினைத்த பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி 295 இடங்களையே கைப்பற்றியுள்ளது. அதிலும் ஆட்சியமைக்க 272 ஆசனங்கள் தேவையாக உள்ள நிலையில் பி.ஜே.பி 240 இடங்களை கைப்பற்றி தனது பெரும்பான்மை அரசை இழந்துள்ளது.



2014 மற்றும் 2019 போல் அல்லாது பா.ஜ.க பெரும்பான்மை பெறவில்லை. ஆட்சியமைப் பதற்கு 30 ஆசனங்கள் அவர்களுக்கு தேவையாக உள்ளது. எனவே எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு தேவை.




பீஹார்மாநிலத்தின்ஜனதாதளயுனைட்டட் என்ற கட்சியின் தலைவர் நிதிஸ்குமாரும், ஆந்திரா மாநிலத்தின் தெலுங்கு தேசம் கட்சியை சேர்ந்த சந்திரபாபு நாயுடுவின் கட்சியும் தற்போது மோடிக்கு ஆதரவுகளை வழங்கினாலும் அவர்கள் நம்பகமான கட்சிகள் இல்லை.

இந்தியா என்ற காங்கிரஸ் தலைமையிலான 20 கட்சிகளைக் கொண்ட கூட்டணி 234 ஆசனங் களைக் கைப்பற்றியுள்ளது. பி.ஜே.பியின் மேற்கு வங்கம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் அது பலமான வெற்றியை பெற்றுள் ளது. 2019 இல் 52 ஆசனங்களைப் பெற்ற காங்கிரஸ் தற்போது 99 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. அது மட்டுமல்லாது பி.ஜே.பி அரசின் 13 மத்திய அமைச்சர்கள் தோல்வியடைந்துள்ளதும் மோடி அரசின் அமைச்சரவையை மக்கள் நிராகரித்துள்ள தையே காட்டுகின்றது.




பிரதமர் மோடியும் தான் நின்ற தொகுதியில் 152,000 வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளதுடன், அவரின் 3 அமைச்சர்கள் அதே மாநிலத்தில் தோல்விகண்டுள்ளனர். எதிர்க்கட்சிகள் மீதான நிதி மோசடி வழக்குகள், முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறைகள், தான்தோன்றித்தனமான அரசியல் அமைப்பு மாற்றங்கள் என கடந்த 10 வருடங்களில் பா.ஜ.க செய்த நடவடிக்கைகளுக்கான பலனே இந்த தேர்தல் முடிவாகும்.


புதிய நாடாளுமன்றம் 26 முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள போதும், பா.ஜ.க ஒரு முஸ்லீம் உறுப்பினரையே கொண்டுள்ளது. பாபர் மசூதி இருந்த இடத்தில் மிகப்பெரும் ராமர் கோவிலை கட்டிய போதும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# “மோடியின் ஆட்சிக்கு கடிவாளமிடப்பட்டிருக்கிறது”

## இந்தியத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள்

தமிழில்: ஜெயந்திரன்



“எதிர்க்கட்சிகளுக்கான சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது.” அண்மையில் நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தல் தொடர்பாக ஊடகங்கள் மேற்குறிப்பிட்டவாறு தான் எழுதிக் கொண்டிருந்தன.

பிரதம மந்திரியான நரேந்திர மோடியின் வலதுசாரி இந்துத்துவ தேசிய கூட்டணி மிகப் பெரிய பெரும்பான்மையை தேர்தலில் பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது மட்டுமன்றி, எந்தவொரு எதிர்ப்பும் இன்றி, பாரிய மாற்றங்களை அந்த அரசினால் கொண்டு வரமுடியும் என்றும் நம்பப்பட்டது.



ஒருதனிக்கட்சி அரசாக இந்தியா விரைவாக மாற்றமடைந்துகொண்டிருக்கிறது என்று மோடியை விமர்சித்தவர்களும், அவரது எதிரிகளும் ஒரு கட்சி அரசாக இந்தியா விரைவாக மாற்றமடைந்துகொண்டிருக்கிறது என்று குற்றம் சுமத்தினார்கள்.

2016ம் ஆண்டில், அமெரிக்காவில் ட்ரம்ப் பெற்ற வெற்றியைப் போன்றும், பிரெக்சிட்டைப் போன்றும், அண்மைக் காலங்களில் உலகில் நடைபெற்ற எதிர்பாரா நிகழ்வுகளைப் போன்றும், கருத்துக்கணிப்புகளும், ஆய்வுகளும் இவ்வாறான விடயங்களில் முற்றுமுழுதாகவே தலைகீழாக மாறலாம்.




‘லோக் சபாவில் 400 ஆசனங்களைப் பெற வேண்டும்’ என்ற இலக்குடன், மோடி இந்தத் தேர்தலை எதிர்கொண்டார். ஆனால் செவ்வாய் இரவு தேர்தல் முடிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் தொடங்கிய பொழுது, ஒரு வெறும் சாதாரண பெரும்பான்மையைப் பெறுவதே அவரது ஆளும் பாரதீய ஜனதாக்கட்சிக்கு கடினமான ஒன்றாக இருக்கும் என்ற உண்மை புலப்படத் தொடங்கியது.

ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மாறாகப் பத்துவருடங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்ததன் பின்னர், முதல் தடவையாக, அரசில் தொடர்ந்து நிலைப்பதற்கு தங்கள் நீண்டகாலக் கூட்டணிக்கட்சிகளில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் மோடிக்கு ஏற்பட்டிருக்கிறது.

‘ஒரு பன்முகமான சமூகத்துக்கு கிடைத்த வெற்றி’ என்று எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தல் முடிவுகளை விபரிக்கும் அதே நேரம், உலகத்தின் மிகப் பெரும் சனநாயக நாட்டைச் சேர்ந்த வாக்காளர்களோ, மோடியின் ஆசனங்களின் எண்ணிக்கையை 63 ஆல் குறைத்து, ‘இந்துக்களுக்கே முதலிடம்’ என்ற மோடியின் கொள்கையை பகுதியாக நிராகரித்திருக்கிறார்கள். நாடாளுமன்றப் பெரும்பான்மைக்கு 272 ஆசனங்கள் அவசியமாக இருக்கும் சூழலில், மோடியின் அரசுக்கு 240 ஆசனங்களே தற்போது கிடைத்திருக்கின்றன.

இதே நேரம் எதிர்க்கட்சிகள் 235 ஆசனங்களைப் பெற்றிருக்கும் நிலையில், பிஜேபியின் கூட்டணிக்கட்சிகள் 52 ஆசனங்களைத் தமதாக்கியிருக்கின்றன.



‘தான் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தலைவர்’ என்று சூளுரைத்த மோடிக்கும், ஆரம்பத்தில் அவர்கள் முன்னணியில் இருந்த போது தோற்கடிக்கப்பட முடியாதவர் என்று கோசமிட்ட அவரது ஆதரவாளர்களுக்கும் இது ஏற்றுக்கொள்வதற்குக் கடினமான ஒரு விடயமாகும்.

“பிஜேபி அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாமல் போனது, மோடியின் அதிகாரத்துக்குச் விடப்பட்ட சவால்” என்று அரசியல் விஞ்ஞானியான பிரதாப் பாணு மேத்தா செவ்வாய் இரவு கருத்துத் தெரிவித்தார்.



வரலாற்றிலே என்றுமே தோற்கடிக்கப்பட முடியாத வாகனமாக மோடி இன்று இல்லை. இன்று மற்றவர்களைப் போலவே அவரும் ஒரு அரசியல்வாதி தான் என்று அவருக்கான ஆதரவைக் குறைத்ததன் மூலம் மக்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

**எதிர்காலத்தில் மோடி தனது ஒவ்வாரு அடியையும் கவனமாக எடுத்துவைக்க வேண்டும்.**

செவ்வாய் அன்று தான் பெற்ற வெற்றியின் மூலம், இந்தியாவைத் தாபித்த பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேருவுக்குப் பின்னர், மூன்றாவது தடவையாகப் பதவியேற்கும் முதல் பிரதம மந்திரியாக மோடி விளங்குகிறார்.



2014ம் ஆண்டு, ஆட்சிக்கு வந்ததில் இருந்து, இந்தியாவில் பல தசாப்தங்களாகக் காணாத வகையிலான பிரபல்யத்தை மோடியால் அடையக்கூடியதாக இருந்தது. இதற்கான காரணம், இந்தியா பொருண்மியத்தில் மிக விரைவாக வளர்ந்து வருவதும், அவர் அறிமுகப்படுத்திய நலன்சேர் திட்டங்களும், அவற்றுடன் இணைத்து 80 வீதமான மக்கள் பலதெய்வ நம்பிக்கையைக் கொண்ட ஒரு தேசத்தில் அவர் கைக்கொண்ட இந்துத்துவ தேசியவாதமும் காரணங்களாகும்.

மோடியின் தலைமைத்துவத்தில், 1.4 பில்லியன்கள் சனத்தொகையைக் கொண்ட இந்தியா உலகில் அதிவேகமாக வளர்ந்துவரும் ஒரு பொருண்மியமாகவும், தொழில்நுட்பம் மற்றும் விண்வெளித் துறைகளில் மேற்கொண்ட நகர்வுகளின் மூலம், ஒரு நவீன பூகோளச் சக்தியாகவும் மாற்றமடைந்திருக்கிறது. இவை இவ்வாறு இருப்பினும் இவ்வாறான அடைவுகளின் பின்னரும், குறிப்பாக கிராமப் புறங்களில், வறுமையும், இளையோர் மத்தியிலான வேலை வாய்ப்பின்மையும், தொடர்ந்து அதிகரித்து வருவதுடன் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளி மேலும் விரிவடைந்திருக்கிறது.



அடுத்த 1000 வருடங்களுக்கான தூர நோக்குப் பார்வை பற்றி மோடி அடிக்கடி பேசியிருக்கிறார். 2047 ம் ஆண்டில் முழுமையாக அபிவிருத்தியடைந்துவிட்ட நாடாக இந்தியாவை மாற்றுவது பற்றியும் அவர் பேசியிருக்கிறார். அரசியல் சாசன ரீதியாக சமயச் சார்பற்ற ஒரு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அனைத்துலக அரசற்ற தேச இனங்களுக்கிடையிலான கொனீபா கால்பந்தாட்டப் போட்டியில்

# முதன் முதலாக தமிழீழ மகளிர் அணி

## - பெருமையோடு வாழ்த்துகின்றது உலகத் தமிழினம்



















# ரஸ்யாவின் போர் வியூகங்களை நோக்கி அமெரிக்காவை திருப்பிய செங்கடல் சமர்

**வேல்ஸில் இருந்து அருஸ்**

கடந்த வாரம் யேமனின் குதீஸ் அமைப்பினர் மேற்கொண்ட ஏவுகணைத்தாக்குதலில் கிறீஸ் நாட்டைச் சேர்ந்த மார்ஹல் தீவுகளின் கொடியுடன் பயணித்த லக்ஸ் என்ற சரக்குக் கப்பல் செங்கடலில் யேமன் கரையில் இருந்து 85 கி.மீ தொலைவில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.




3 ஏவுகணைகள் நேரிடையாக கப்பலில் வீழ்ந்து வெடித்ததால் கப்பல் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. செங்கடல் மற்றும் மத்தியதரைக் கடலில் வைத்து தாம் 6 கப்பல்களைத் தாக்கியுள்ளதாக குதீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்தியதரைக்கடல் வரையில் குதீஸ் அமைப்பினரின் தாக்குதல் தூரவீச்சு அதிகரித்திருப்பது என்பது அவர்கள் நீண்டதூர ஏவுகணைகளை கொண்டுள்ளதை காட்டுவதாகவும், அது களமுனையில் மேலும் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு எதிராக கடந்த நவம்பர் மாதம் முதல் குதீஸ் அமைப்பினர் செங்கடலில் இஸ்ரேல் மற்றும் அதன் போருக்கு ஆதரவுகளை வழங்கும் நாடுகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர். அமெரிக்க மற்றும் பிரித்தானிய வான்படையினர் குதீஸ் அமைப்பினரின் தளங்களைத் தாக்கியபோதும் ஹதீஸ் அமைப்பினர் தொடர்ந்து கப்பல்களைத் தாக்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரையில் அவர்கள் நூற்றுக்குமேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.




செங்கடலில் குதீஸ் அமைப்பினர் மேற்கொண்டுவரும் தொடர் தாக்குதல்கள் அந்த கடல் வழிபோக்குவரத்தை கடுமையாக பதித்துவருகின்றது. குதீஸ் அமைப்பினர் மீது பிரித்தானியா மற்றும் அமெரிக்கப் படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அவர்களின் நடவடிக்கைகளை நிறுத்துவதாக தெரியவில்லை.

கடந்த வாரம் அமெரிக்க மற்றும் பிரித்தானியா படையினர் மேற்கொண்ட வான்தாக்குதலில் யேமனின் வானொலி நிலையம், துறைமுகம் ஆகிய பகுதிகள் சேதமடைந்ததுடன் படையினர் மற்றும் பொதுமக்கள் என 16 பேர் கொல்லப்பட்டதுடன், 45 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து குதீஸ் அமைப்பினர் செங்கடலில் பயணித்துக் கொண்டிருந்த அமெரிக்காவின் முக்கிய விமானந்தாங்கி கப்பலான எசன்கோவர் (Dwight Eisenhower) கப்பல் மீது குரூஸ் வகை கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏவுகணைகள் கப்பலை நேரிடையாக தாக்கியதாக குதீஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளபோதும் அமெரிக்கா அதனை உறுதிப்படுத்தவில்லை. எனினும் மீண்டும் அவர்கள் 24 மணிநேரத்தில் ஆளில்லாத பல தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் எசன்கோவர் விமானந்தாங்கி கப்பலையும், ஹானி என்ற டிஸ்ரோயர் கப்பலையும் தாக்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து செங்கடலில் பயணித்த கப்பல்கள் சவுதி அரேபியாவின் ஜெட்டா துறைமுகம் நோக்கி திரும்பிச் சென்றுள்ளன.



அதேசமயம் அரேபியன் கடலில் மெயினா என்ற கப்பலையும், இந்துசமுத்திரத்தில் ALO-RAIQ என்ற கப்பலையும், செங்கடலில் ABLIANI என்ற கப்பலையும் தாம் தாக்கியுள்ளதாக குதீஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளர்.

அதாவது குதீஸ் அமைப்பினரின் தாக்குதல்களை அமெரிக்காவினால் தடுக்க முடியவில்லை என்பதுடன் செங்கடலின் ஊடான கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிப்படைந்துள்ளதால் ஐரோப்பாவின் பொருளாதாரம் கடுமையான பின்னடைவைச் சந்தித்து வருகின்றது.

செங்கடல் பகுதியில் குதீஸ் அமைப்பின் பலம் அதிகரித்து வருவதுடன் அவர்கள் புதிய தாக்குதல்களுக்கு திட்டமிடுவதும் தமக்கு கவலை தருவதாக பிரித்தானியாவின் படைத்துறை ஆய்வாளர் கொவாட் வெல்டன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து எரிவாயுக்களை ஏற்றிச் சென்ற அமெரிக்காவின் 123 கப்பல்கள் செங்கடல் பாதையை தவிர்த்து தென்னாபிரிக்கா வழியாக சென்றுள்ளதாகவும். இது அதிக பொருட் செலவையும், கால விரயத்தையும் எற்படுத்தி வருகின்றது எனவும் உலகின் நிதி நிறுவனங்களைத் தரப்படுத்தும் Standard & Poor என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. செங்கடலில் இடம்பெறும்தாக்குதலால்சுயஸ்கால்வாய்ஊடான பயணப்பாதை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இது எகிப்த்தின் பொருளாதாரத்திலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் செங்கடலுக்கு பதிலாக ரஸ்யாவின் வடக்கு கடல் பாதையை பயன்படுத்துவது தொடர்பில் மேற்குலக நாடுகள் சிந்தித்து வருகின்றன. இதன் மூலம் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கான வர்த்தகத்தின் செலவினங்களைக் குறைக்க முடியும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைத் தளமாகக் கொண்ட பல ஊடகங்கள் கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன. அவற்றில் Foreign Policy என்ற ஊடகத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் முக்கியமானவை.




பல கப்பல் நிறுவனங்கள் இந்த பாதை குறித்து சிந்தித்து வருகின்றன. கடந்த சில வருடங்களாக இது குறித்து பேசப்பட்டாலும் தற்போது அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான 5,600 கி.மீ நீளமான வடக்கு கடல் பாதை என்பது தற்போதைய பயணப்பாதையை விட 8,000 கி.மீ தூரம் குறைவானது என்பதுடன், பயணத்தின் நேரத்தையும் 40 தொடக்கம் 60 விகிதங்களாக குறைக்கும்.



8,000 கி.மீ தூரம் குறைவு என்பது பயணத்திற்கான நேரம் மற்றும் செலவுகள் என்பன கணிசமான அளவு குறையலாம். தற்போதைய உலகில் இணையவழி ஊடாக பொருட்களை மக்கள் விரைவாக கொள்வனவு செய்ய விரும்புவதால் இந்த பாதை அதனை விரைவாக கொள்வனவு செய்தவர்களிடம் கொண்டு சேர்க்க உதவலாம்.

ஆனால் இந்த பாதையின் பெரும்பகுதி ரஸ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆட்டிக்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பலவீனமான ... தொடர்ச்சி ...

மோடியால் வாக்குகளை பெறமுடியவில்லை. ராமர் கோவிலை கட்டிய இடத்திலும் தோல்வி தான்.

அதாவது வெற்றி பெற்றாலும் அவர்கள் தோல்வியையே உணர்கின்றனர்(*A victory that feels like defeat*). அதேசமயம், காங்கிரஸ் கட்சிக் கூட்டணி தோல்வி அடைந்தாலும் வெற்றிபெற்றதாக உணர்கின்றனர். அது தான் இந்த தேர்தலின் முடிவு. ஆனால் தற்போதைய தேர்தல் முடிவுகள் இந்தியாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளதாக சிலர் கூறுகின்றனர். காஸ்மீரின் காணி அதிகாரத்தை ஒரே இரவில் நீக்கியது போன்ற அரசியல் யாப்பு மாற்றங்களை வருங்காலத்தில் மேற்கொள்ள முடியாது. எதிர்க்கட்சிகளைதான்தோன்றித்தனமாக பழிவாங்க முடியாது. அதானி, அம்பாணி போன்ற ஒரு சில வர்த்தகர்கள் இந்தியாவின் மொத்த செல்வத்தையும் அனுபவிக்க முடியாது.

சந்திரபாபு நாயுடுவும், நிதிஸ்குமாரும் ஆட்சியில் பெரும் பதவிகளை எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சபாநாயகர், துணைப் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது மட்டுமல்லாது நாயுடுவின் அரசியல் வாரலாறு என்பது சந்தர்ப்பவாதமாகவே இருந்ததாக கூறப் படுகின்றது.

அதாவது பலவீனமான இந்திய அரசு அமையப்போகின்றது. அது அதன் வெளிவிவகாரக் கொள்கையிலும் எதிரொலிக்கும். மேற்குலகம் விரும்பியதும் அதனைத் தான். இந்திய அரசை அச்சுறுத்துவதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தியாவில் ஒரு பலவீனமான அரசு அமையவுள்ள நிலையில் தனது நாட்டின் பாதுகாப்புக்கு இந்தியா அச்சுறுத்தலாக உள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.

இந்த தேர்தல் என்பது பா.ஜ.கவிற்கு மட்டும் தோல்வியைக் கொடுக்கவில்லை. தமிழகத்தின் கட்சிகளுக்கும் காத்திரமான செய்தியை கூறியுள்ளது. அதாவது திராவிட முன்னேற்றக்கழகம் 26 விகித வாக்குளையும், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் 20 விகித வாக்குகளையும், பா.ஜ.க 11 விகித வாக்ககளையும், காங்கிரஸ் 10 விகித வாக்குகளையும் தமிழகத்தில் பெற்றுள்ளது என்பது எந்த கட்சிக்கும் மக்களின் ஒருமித்த ஆதரவு இல்லை என்ற செய்தியை கூறியுள்ளது.

இந்தியாவில் மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் இடம்பெற்ற தேர்தல்களில் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புவது அல்லது காலம் காலமாக ஆட்சி செய்துவரும் கட்சிகளின் வாக்குறுதிகளை நம்ப மறுப்பதும் தெளிவாக தெரிகின்றது. இது அமெரிக்க மற்றும் பிரித்தானியா தேர்தல்களிலும் எதிரொலிக்கும் என்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

உலகில் அதிக மக்கள் தொகையை கொண்ட நாடான இந்தியாவின் வேலையில்லா பிரச்சினை மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றில் தான் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூகோள அரசியல் தங்கியிருக்கப்போகின்றது.

பலவீனமான இந்தியா என்பது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பூகோள அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் அது இந்தியாவினால் எதிரியாக பார்க்கப்பட்ட பல இனங்களின் நன்மைக்கே வழிவகுக்கும் என்பதேயன்றி இந்திய மக்களுக்குப் பாதகமாக அமையாது.

• • •

## அனைத்துலக ... தொடர்ச்சி ...

வைத்தியசாலைகள் மற்றும் அகதி முகாம்களை குறிவைத்து தாக்கி வருவது போர்க்குற்றமாகும். ஆனால் இந்த குற்றங்களுக்காக அனைத்துலக நீதிமன்றம் ஹமாஸ் அமைப்பின் 3 தலைவர்கள் உட் பட இஸ்ரேல் அதிகாரிகளுக்கு பிடியாணை பிறப்பித்துள்ளதை தற்போது அமெரிக்கா கடுமையாக எதிர்த்து வருகின்றது.

அனைத்துலக நீதிமன்றத்தின் நீதிபதி கள் மீது பயணத்தடைகள் கொண்டுவரப் போவதாகவும் அமெரிக்கா மிரட்டிவருகின்ற அதேசமயம், அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தின் தலைவர் கரீம் ஹானுக்கு இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பின் தலைவரால் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் ... தொடர்ச்சி ...

அமைப்புக்கான நிதியையும் 11.3 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்துள்ளார்.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பொர் அமெரிக் காவில் தாக்குதல்களை நடத்து வதற்கான ஏது நிலைகளைத் தோற்றுவிக்கலாம். அமெரிக்கா வில் வாழும் யூத மக்களுக்கு எதிரான நிலை அதிகரித்து வருகின்றது. எனவே உள்ளூர் நபர் களுடன் இணைந்து வெளிநாட்டு சக்திகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் என அவர் தெரிவித்தள்ளார்.

## இந்தியா பல ... தொடர்ச்சி ...

என்ற அவர்களின் கட்சி 295 இடங்களை கைப்பற்றியுள்ளது. எனவே எதிர் வரும் 5 ஆண்டுகளுக்கு இந்த கட்சிகளின் ஆதரவு தேவை.

பீஹார் மாநிலத்தின் ஜனதா தள யுனைட்டட் என்ற என்ற கட்சியின் தலைவர் நிதீஸ்குமாரும், ஆந்திரா மாநிலத்தின் நெலுங்கு தேசம் கட்சியை சேர்ந்த சந்திர பாபு நாயுடுவின் கட்சியும் தற் போது மோடிக்கு ஆதரவுகளை வழங்கினாலும் அவர்கள் நம்பகமான கட்சிகள் இல்லை. இந்தியா என்ற காங்கிரஸ் தலைமையிலான 20 கட்சிகளைக் கொண்ட கூட்டணி 234 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. பி.ஜே.பியின் மேற்கு வங்கம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் அது பலமான வெற்றியை பெற்றுள்ளது.

2019 இல் 52 ஆசனங்களைப் பெற்ற காங்கிரஸ் தற்போது 99 ஆசனங்களை கைப் பற்றியள்ளது என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## ஐநாவின் வதிவிட ... தொடர்ச்சி ...

புதைகுழி அமைந்துள்ள பகுதிக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போது முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரி மற்றும் இந்த புதைகுழி வழக்கை முன்னெடுத்துவரும் சட்டத்தரணிகளில் ஒரு வரான கணேஸ்வரன் ஆகி யோர் புதைகுழி அமைந்துள்ள பகுதியில் ஐநாவின் வதிவிடப் பிரதிநிதிக்கு நிலைமைகளை தெளிவுபடுத்தினர்.

## பாடசாலை ... தொடர்ச்சி ...

உணவினை உண்ணுகின்ற அப்பிள்ளைகளின் கீழ்வகுப்பை சேர்ந்த குடும்ப நண்பர்கள் மத்தியில், ஏன் அவர்கள் மட்டும் எமக்கு வழங்கும் இலவச உணவை உண்ணாமல் விசேடமாக உணவினை உண்ணுகின்றனர்? என்று உளவியல் ரீதியாக ஒரு தாக்கத்தினை ஏற்படுத்த அது வழி வகுக்கின்றது.

ஆகவே அரசாங்கத்தினால் கொண்டுவரப் படுகின்ற இந்த வறிய மாணவர்களுக்கான இலவச உணவு திட்டத்தின் பூரண பயனைப் பெறுவதற்கு சகல பெற்றோர்களும் தமது ஆதரவை வழங்கி நிற்க வேண்டும் என்பது மிக அவசியமாகும். ஆகவே மனிதனின் வளர்ச்சி மற்றும் விருத்தி நிலையில் சிறுவர் பராயம் முதன்மையானதும் முக்கியத்துவமானதுமாகும். ஆகவே இந்த இலவச உணவுத்திட்டம் தொடர்பாக சகல பெற்றோர்களும் விழிப்புணர்வுடன் செயல்படுவதுடன், எமது நாட்டு அரசாங்க அதிகாரிகள் கற்றலில் போசனை மட்ட திட்டத்திற்காக அதிகளவு நிதியினை ஒதுக்கீடு செய்து சிறந்த போசாக்குள்ள மாணவர்களை உருவாக்குவதன் மூலம் சிறந்த கற்ற சமுதாயத்தினை எதிர்காலத்தில் கட்டி எழுப்ப முடியும்.

• • •

## ஐரோப்பிய ... தொடர்ச்சி ...

ஒவ்வொரு மக்களினதும் தொடர்பாடல்களை உன்னிப்பாக கவனிக்கும் பொறி முறைகளுக்கும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

சமூகவலைத்தளங்கள் மற்றும் இலத் திரனியல் சாதனங்களின் தொடர்பாடல்களை பயன்படுத்துபவர்களுக்கு தெரியாமல் காவல் துறையினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் கண்காணிப்பதற்கு வசதியான பொறிமுறைகளை சமூகலைத்தளங்களின் நிறுவுனர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற சட்டங்களும் அந்த ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யத் தவறும் சமூகவலை தத்தளங்கள் மீது குற்றப்பணம் அறவிடப் படும். வற்ஸ்அப், ரெலிகிராம், முகநூல், இன்ஸ் ரோகிராம், கூகுள், அலக்சா, அன்றோயிட் மற்றும் அப்பிள் போன் நிறுவனங்கள் மீது இந்த புதிய கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படவுள்ளன. மேலும் இந்த நிறுவனங்கள் மக்களின் உரையாடல்களை குறிப்பிட்ட சில காலங்களுக்கு சேமித்து வைக்க வேண்டும் என்ற புதிய நடைமுறைகளும் அறிமுகப்படுத் தப்படவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**பலவீனமான ... தொடர்ச்சி ...**

நாட்டை, இந்துக்களுக்கு முதலிடம் வழங்குகின்ற ஒரு நாடாக தான் மாற்றப் போவதாகவும் அவர் பேசிவந்திருக்கிறார். முஸ்லீம்களின் தொழுகைக் குரிய ஒரு மசூதி இடித்தழிக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒரு பாரிய இந்து ஆலயத்தை அண்மையில் அவர் அங்குரார்ப்பணம் செய்திருந்தார்.



*"எதிர்காலத்தில் சாதிப்பது தொடர்பாக மோடி பேசி வந்த விடயங்களைப் பொறுத்தளவில், இனிமேல் அவர் மெதுவாகவே நகர வேண்டும்"* என்று புதுடெல்லியைத் தளமாகக் கொண்டு இயங் கும் வர்ணனையாளரான ஆரதி ஜேரத் கருத்துத் தெரிவித்தார். *"உலக அரங்கில் ஒரு காத்திரமான குரலாக ஒலிக்கும் அதே வேளை, இந்தியாவை ஒரு இந்து நாடாக மாற்றும் முயற்சியைப் பொறுத்து அவர் கவனமாகவே அடியெடுத்து வைக்க வேண் டும். ஏனென்றால் உள்நாட்டில் அவர் எதிர் கொள்ள சவால்கள் பல இருக்கின்றன."*

'எதிரிகளின் குரலை அடக்குவதற்கு, அரச நிறுவனங்களை பிஜேபி பயன்படுத்தி வருகிறது' என்ற குற்றச்சாட்டு நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. முன்னர் மிகவும் பலமான குரலாக இருந்த ஊடகங்கள் மோடியின் ஆட்சியின் கீழ் அடக்கி வாசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றன. தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட் சித் தலைவர்களும், கட்சிகளும் பலவிதமான சட்டரீதியானதும் நிதிரீதியானதுமான சவால்களு க்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தனர்.



டெல்லியில் மிகவும் பிரபலமாக இருந்த முதல் அமைச்சரும் ஆம் ஆத்மி கட்சியின் தலை வருமான அர்விந்த கெஜ்ரிவால் கைது செய்யப் பட்ட நிகழ்வு, தலைநகரத்தில் பல ஆர்ப்பாட் டங்களுக்கு வித்திட்டதுடன், தமது கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அரசியல் சதி என் றும் அவரது ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். பிஜேபி அந்தக் குற்றச் சாட்டை மறுத்திருக்கிறது.

முன்னர் தம்மிடையே கடுமையாகப் பிளவுபட்டிருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மீண்டும் அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க சாவா வாழ்வா என்று போராட்டத்தில் பிஜேபியைக் கடுமையாக எதிர்க்கும் நிலைக்கு கெஜ்ரிவாலின் விடுதலை வழிகோலியது.

### கடிவாளமற்ற அதிகாரத்தை நோக்கிய நகர்வு

பத்து ஆண்டுகள் நீடித்த மோடியின் அரசு, சமயங்களுக்கிடையே பிரிவினைகளை அதிகரித் திருக்கிறது என்று மோடியை விமர்சித்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இஸ்லாமிய மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் 200 மில்லியன்களுக்கு மேலான எண்ணிக்கையைக் கொண்ட முஸ்லீம் மக்களை தனிமைப்படுத்தியதோடு, நீண்ட காலமாகச் சமூகங்களிடையே முரண்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் மத ரீதியிலான கலவரங்களையும் தோற்றுவித்திருந்தது.



தேர்தலுக்கான பரப்புரையை மோடி மேற்கொண்டு வந்த காலப்பகுதியில், தனது தளத்தைத் தக்க வைக்க இஸ்லாமிய மக்களுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தி வந்த தாக மோடி மீது குற்றம் சுமத்தப்பட்டது. எத்த னையோ நூற்றாண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து வரும் முஸ்லீம் மக்களை 'ஊளவாளிகள்' என அடையாளப்படுத்தியது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

'இவ்வாறான வெளிப்படையான பேச்சு களை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

*"அரசு கட்டுமீறிச் செயற்பட முடியாதவாறு மீண்டும் அதற்குக் கடிவாளமிடப்பட்டிருக்கிறது"* என்று என்று அந்த ஊடகவியலாளர் தேர்தல் முடிவு களை விபரித்தார்.

கருத்துக்கணிப்புகள் துல்லியமானவையாக இருந்திருந்தால் உண்மையில் பிஜேபி தாம் நினைத்தவாறு அனைத்தும் செய்யும் திசை யில் பயணித்திருக்கும் என்று அரசியல் விஞ்ஞானியான மேத்தா கூறினார். எல்லா அரசியற் செயற்பாடுகளுக்கும் அவ்வாறான அடக்குமுறை முடிவுகட்டியிருக்கும். அவ்வாறு அமைந்திருந்தால் எதிர்ப்பவர்கள் அனைவரும் ஒழித்துக்கட்டப் பட்டிருப்பார்கள். சிவில் சமூகத்தின் குரலும் ஒடுக்கப்பட்டிருக்கும்.

*"போட்டி நிறைந்த ஒரு அரசியற் கட்டமைப்பு இந்தியாவில் மீண்டும் தோன்றி யிருக்கிறது."*

வெறுப்புப் பேச்சுக்கும் சர்வாதிகாரத்துக் கும் எதிராக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதை செவ்வாய் வெளிவந்த தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன என்று எதிர்க்கட்சிகளின் ஒரு பகுதியான ஆம் ஆத்மி கட்சியைச் சார்ந்த சஞ்சய் சிங் தெரிவித்தார்.

*"பத்து வருடங்கள் நீடித்த பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி தொடர்பாக மக்கள் இப்போது களைப்படைந்திருக்கிறார்கள் என்பதையும், ஒரு மாற்றத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்ற செய்தியையும் தேர்தல் சொல்கிறது."*

செவ்வாய்க்கிழமை இரவு அதிர்ச்சியளிக் கும் வகையில் இழப்பை பிஜேபி சந்தித்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரியத் தொடங்கும் தறுவாயில், மோடி அரங்கத்தில் தோன்றினார். ரோஜா மலர்இதழ்கள் அவர் மேல் தெளிக்கப்பட, மிகப்பெரிய ஒரு பூமாலையை அணிந்தவராக, மோடி, மோடி, மோடி என்று மக்கள் கூச்சலிட்டுக்கொண்டிருக்க அரங்கத்தில் தோன்றிய மோடி, தனது தோல்வியை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கவில்லை.



*"இந்த நாள் மகிமைக்குரிய ஒரு நாள்"* என்று அவர் கர்ச்சித்தார். என்டிஏ மூன்றாவது தடவையாக ஆட்சி அமைக்கப் போகின்றது என்று வலதுசாரி அமைப்பான தேசிய சனநாயகக் கூட்டணியைக் குறித்து அவர் பேசினார்.

சிறிய உள்நாட்டுக் கட்சிகள் ஒன்றி ணைந்து தேசிய சனநாயகக் கூட்டணியின் கீழ் வந்து பிஜேபியின் தலைமையில் ஆட்சி அமைப்பது தொடர்பாக எந்தவித சந்தேகமும் இல்லாதிருக்கின்ற போதிலும், பிரபலமான ஒரு தலைவருக்கு கட்டுப் போடப்பட்டிருக்கிறது என்பது மட்டும் தெளிவான ஒரு உண்மையாகும்.

*"மக்கள் மத்தியில் தொடர்ந்து இன்னும் பிரபலமாகவே இருக்கும் ஒரு தலைவர் இவ் வாறான ஒரு செய்திக்கு கவனமாகச் செவிமடுக்க வேண்டும்"* என்று கொள்கை ஆய்வு மையத்தின் ஓர் உறுப்பினரான நீலாஞ்சன் சிர்க்கார் தெரிவித்தார். *"உயிரோட்டமுள்ள ஒரு சனநாயக நாட்டில் வரம்பு மீறப்பட்டுள்ளது என்பதை வாக்காளர்களில் பலர் உணரத்தலைப்பட்டிருக்கின்றனர்"* என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**நன்றி: edition.cnn.com**

**விலாங்கு மீன்... தொடர்ச்சி ...**

தடம்மாறாது பயணிக்கும் அமைப்பு பொறிமுறை கலாசார வெளிக்குள்ளிருந்து, சிவில் சமூக அமைப் புகளும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் வெகுதொலைவு பயணப்பட்டுவிட்ட நிலையில் அப்படிப்பட்ட ஒருவரை தமிழ்த்தேசியம் சார்ந்து கடிவாளம் போடுவது இயலாத ஒன்றாகும்.

அதனால் தான் தமிழ் பொதுவேட்பாளர் முன்னெடுப்பானது வரலாற்று திருப்புமுனையாக, காரிருள் சூழ்ந்திருக்கும் தமிழர்களது வாழ் வில் வழிகாட்டும் விடிவெள்ளியாக அமையும் வகையில் திட்டமிடப்படுவது இன்றியமையாதது ஆகும்.

இதேநேரம், மே தின உரையில் 'பலர் பொதுவேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று அஞ்சுகின்றார்கள். அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்துவிட்டு 2ம் 3ம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளரு க்கு அளிக்க முடியும்' என்று க.வி. விக்னேஸ்வரன் கருத்து தெரிவித்திருந்தார்.

தமிழ் வேட்பாளரை நிறுத்துங்கள் அதனை நான் வரவேற்கிறேன். ஆனால் 2 ஆம், 3 ஆம் வாக்குகள் வேண்டாம். அது அந்த வாக்களிப்பை பலவீனப்படுத்தும் என அதே மேடையிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் பதிலளித்திருந்தார். தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி அரசுத் தலைவர் தேர்தலை எதிர்கொள்வது என்ற மையப்புள்ளியில் ஒன்றிணைவே சவாலானதாக இருக்கையில் இப்படி பொதுவெளியில் வாத பிரதிவாதங்களை ஊக்குவிக்கும் வகையிலான கருத்துகளை வெளிப்படுத்துவது அரசியல் முதிர்ச்சியற்றதாகவே அமைந்துவிடுகிறது.

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னி றுத்துவது என்ற கருத்தியலோடு முதலில் அனைவரும் ஒன்றித்து வரவேண்டும். அதன் பின்னர் பொது வேட்பாளராக பிரமுகர் ஒரு வரை தேடுவதா அல்லது அதன் மூலமாக வட கிழக்கு தமிழர்களின் ஆதரவை குறிப்பிட்ட விடயத்திற்கு கோருவதா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் மிக முக்கியமாக வட கிழக்கு தழுவியதாக தமிழர்களின் வாக்குகளை பொதுவேட்பாளரை நோக்கியதாக அணி திரட்டுவதற்கான மூலோபாய செயற்பாடு மற்றும் களசெயற்பாடுகள் திட்டமிடப்பட வேணடும். உட்கட்சி பூசல்கள் கடந்து வடக்கு கிழக்கு தழுவியதாக கட்சி அரசியல் கடந்து தேசமாக செயற்படுவதற்கு உளமார அனைத்து கட்சிகளும் அணியமாக வேண்டும். இவை அனைத்தும் ஊடக வெளிச்சம் படாதவகையில் மிகவும் இரகசியமான முறையில் உள்ளக கலந்துரையாடல்களாக மேற்கொள்ளப்பட்டே ஆகவேண்டும்.

**தொடரும்**

## இழுபறி நிலை... தொடர்ச்சி ...

அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு வெளியே சுயதொழில்களில் ஈடுபடுவதற்கும் வருமானம் உழைப்பதற்குமான அவர்களது முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு உள்ளேயே மேலதிக வருமானத்தை உழைத்துக் கொள்வதற்குத் தேவையான வினைத்திறனை உருவாக்குதல். தோட்ட விவசாயத்திற்கும் வேறு உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் தேவையான வினைத் திறன்களை மேம்படுத்தல். தோட்டங்களோடு தொடர்பான ஆதாரத்தொழில் சார்ந்த வினைத் திறன்களை மேம்படுத்தல். தோட்ட இளைஞரது மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலமும், பெண்களின் பங்கெடுப்பு, பால் தொடர்பான பிரச்சினைகள், மேலதிக வருமானத்தை உழைத்தல் என்பன பற்றிய அவர்களது அறிவினை வளர்ப்பதன் மூலம் தோட்டக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

### குறைவான வாய்ப்பு

இவற்றோடு இளைஞர்களின் பல்துறை அபிவிருத்தி கருதி பின்வரும் பயிற்சிகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப் படையில் அறிவுசார் பயிற்சித் திட்டங்கள், மைய வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள், தொழில்சார் பயிற்சித் திட்டங்கள், முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்வதற் கான பயிற்சித் திட்டங்கள், தோட்ட வேலை களுக்கு பயன்படக்கூடிய பயிற்சித் திட்டங்கள் எனப்பலவும் இதில் உள்ளடங்கும்.

நாட்டின் ஏனைய இளைஞர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளிலும் பார்க்க மலையக இளைஞர்களுக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றன. இத் தகைய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய கடப்பாடு அரசியல்வாதிகளுக்கு அதிகமுள்ளது. இதிலிருந்தும் அவர்கள் விலகிச் செல்ல முற்படுதல் கூடாது. இதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்கள் இளைஞர்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு பயிற்சி நெறிகளை இலக்கு வைத்து நடாத்துதல் வேண்டும். சமகாலத்தில் சகல துறைகளிலும் தேடல் என்பது முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இது பல்துறை அபிவிருத்திக்கும் உந்துசக்தியாக அமையும். எனவே மலையக இளைஞர்கள் தேடல் திறனை விருத்தி செய்து கொண்டு எழுச்சிக்கு வித்திட வேண்டும். சமூக அபிவிருத்தியில் இளைஞர்களின் வகிபாகம் அதிகமாகும் என்பதனை மறந்து செயற்படுதல் கூடாது.

• • •

## மாற்றுத் திற ... தொடர்ச்சி ...

இதில் பல வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டு டன் வைத்திய சேவைகளும் சிறப் பாக இடம் பெற்றன.

இதில் கப்பல் துறை ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஏ.அனஸ் டீன், வைத்தியர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இரணைமடு ... தொடர்ச்சி ...

கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைவாக இன் றைய தினம் ஒழு ங்கு செய்யப்பட்டது.

இதன்போது இரணைமடு நீரப்பங் கீடு தொடர்பான யாழ்மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாத வாறு ஒரு தீர்க்கமான முடிவினை எட்டுவதற்கான நடவடிக்கைக களை அமைச்சர் ஜீவன் தொண்ட மான் அவர்கள் மேற்படி தெளிவு படுத்தினார்.

இக்கலந்துரையாடலில் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்ட மைப்பின் தலைவருமான சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் ராமநாதன், தர்ம லிங்கம் சித்தார்த்தன் அமைச்சின், செயலாளர் நபீல், நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப் பின் தலைவர், பொதுமுகாமையாளர் அரச அதி காரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

குறிப்பாக இதன்போது இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான இறுதிபடுத்தப்பட்ட புதிய நவீன ஆய்வுகளுக்கு அமைவாக சிவில் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, UN நீர் முகாமைத்துவம், யாழ் பல்கலைக்கழகம், நீர்ப்பாசனத் திணைக்களம், UN உணவு மற்றும் விவசாய அமைப்புக்கள் ஆகிய அமைப்புக்களின் தீர்மானமிக்க ஆய்வு அறிக்கையினை எதிர்வரும் 6 மாதங்களுக்குள் பெற்றுக்கொண்டதன் பின்னர் தீர்மானமிக்க முடிவுகள் எட்டப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## ரஸ்யாவின்... தொடர்ச்சி ...

கடல்பகுதியில் 70 விகிதமானது ரஸ்யாவின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது. எனவே அதனை பயன்படுத்த வேண்டும் எனில் ரஸ்யாவின் அனுமதியும், அதனை பயன்படுத்துவதற்கான பணமும் (Transit fees) செலுத்த வேண்டும். உக்ரைன் போரைத் தொடர்ந்து ரஸ்யாவுக்கும் மேற்குலகத்திற்கும் இடையிலான உறவுகள் மோசமான நிலையில் இருப்பதால் ரஸ்யா மேலும் அதிக கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்ற அச்சமும் உள்ளது. மேலும் ரஸ்யாவுக்கும் நேட்டோவிற்கும் இடையில் போர் ஒன்று ஆரம்பித்தால் இந்த பாதையை ரஸ்யா மூடிவிடும் என்ற அச்சமும் மேற்குலகத்திடம் உள்ளது.

அதாவது ரஸ்யா மீது பொருளாதாரத் தடையை விதித்தவர்கள் மீண்டும் ரஸ்யாவிடம் சென்று உதவிகேட்கும் நிலையை செங்கடல் போர் ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் போரை ஆரம்பித் தவர்கள் தமக்கு வேறு களமுனைகள் திறக்கப்படும் என்பதை முன்கூட்டியே அறியாததன் விளைவுகள் தான் காசா மற்றும் செங்கடல் களமுனைகள்.

ஜோர்ஜியாவில் அல்லது மோல்டோவா வில் ரஸ்யாவுக்கு எதிராக மற்றுமொரு கள முனையை திறப்பதற்கு மேற்குலகம் திட்டமி ட்டபோதும், அதனை அவர்கள் மேற்கொள்வதற்கு முன்னர் அவர்களுக்கு சவாலான இரண்டு புதிய களமுனைகள் கடந்த வருடம் திறக்கப்பட்டுள்ளது. மேற்குலகம் மிகவும் சிக்கலான இரண்டு கள முனைகளை எதிர்கொண்டுவருவது உக்ரைன் போரின் உக்கிரத்தை தணித்துள்ளது.

எனவே தான் தற்போது அமெரிக்காவின் பாதுகாப்புத் தலமையகமான பென்ரகன் தற்போது ரஸ்யாவின் போரியல் வியூகங்கள் தொடர்பான நூல்களை தேடி வாங்கி படித்து வருவதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அதாவது சில பாடங்களை நாம் எதிரியிடம் இருந்து கற்பதிலும் தவறில்லை.

## தமிழ் பொது ... தொடர்ச்சி ...

கொலைகாரன் என்றுகூறவில்லை. பேரினவாதம், சிங்கள அரசியல் கலாச்சாரம்தமிழர்களுக்கு எந்த ஒரு அதிகாரத்தையும் கொடுக்க சம்மதிக்காது. எனவே பேரம் பேசுவது என்ற கதையை தமிழ்த்தலைவர்கள் கைவிடவேண்டும். சிங்களத்துடன்பேசிய பேரத்தை இந்தியாவினால் கூட அமுல் நடத்த முடியவில்லை.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது, மற்றும் இரண்டாவது தெரிவு தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக முடிவெடுக்க வேண்டும் என உருத்திரகுமாரன் தொடர்ந்து பேசுகையில், தமிழ் பொது வேட்பாளர் மூலமாக நாங்கள் ஒரு அரசியல் திரட்சியைக் கொண்டு வரலாம், சுயநிர்ணயத்திற்கான திரட்சியைக் கொண்டு வரலாம் எனக் கூறினார்.

தமிழ் பொதுவேட்பாளரைக் கொண்டு வருவதன் மூலம் எங்களுடைய பிரச்சனைகளை சிங்கள தொலைக்காட்சியில் பேசலாம்என்று கூறி பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை சிறு மைப்படுத்தவேண்டாம் என அரசியல் தலை வர்களைகேட்டுக் கொள்வதாகவும், நாங்கள் இன்று பேசவேண்டிய சமூகம், உலக சமூகம்.

மேலும் தமிழ் பொதுவேட்பாளர் நிலைப் பாடு எமது அடுத்த கட்ட அரசியல் நிகழ்வான பொதுவாக்கெடுப்பிற்கு உதவும் எனவும் கூறினார்.

நாங்கள் சிங்களத் தலைமையை பகிஷ் கரிக்கின்றோம் என்றஅடிப்படையில் இரண்டா வது தெரிவை தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கூறினார்.

இதன் மூலம் தமிழ்பொதுவேட்பாளர் நிலைப்பாட்டையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பகிஷ்கரிப்பின் நிலைப்பாட் டையும் இணைக்கலாம் எனவும் கூறினார்.

தமிழ் பொதுவேட்பாளர் கணிசமான வாக்குகளை தமிழ்மக்களிடம் இருந்து பெற முடியாமல் இருக்கக்கூடும். ஆனால் நாங்கள் எங்கோ ஒரு இடத்தில் தொடங்கத்தான் வேண்டும். சில சர்வதேச சக்திகள் தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை விரும்ப மாட்டார்கள் எனக் கூறலாம்.

நாங்கள் சர்வதேச சக்திகளின் விருப்பிற்கு தலையாட்டும் பொம்மைகளாக இருக்கத் தேவையில்லை.

எங்களுடையஅரசியல் விருப்பங்களை நாங்கள் சர்வதேச சக்திகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

இன்றுவரை சர்வதேச சக்திகள் தமிழர் களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை தங்களு டைய பூகோள அரசியல் நலன்களுக்கு பயன்படுத்துகின்றார்களேயொழிய தமிழர் களிற்கு நீதி வழங்க வேண்டிய செயற் பாடுகளில்ஈடுபடவில்லை.

2015 ஆம் ஆண்டு மகிந்தா, சீனாவின் பக்கம்சாய்வதால் நல்லாட்சி வரும் என்று சொல்லி தமிழர்களை பாவித்து சர்வதேச சமுதாயம் மகிந்தாவை நீக்கியது,

சர்வதேச சமுதாயத்திடம் நாம் பேரம் பேச வேண்டுமேயொழிய அவர்களை சந்தோஷப் படுத்திக் கொள்ளக்கூடாது.

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக நாடுகடந்த தமிழீழஅரசாங்கம், தாயகத்தில் எவ்வாறு மக்கள் ஆதரவை திரட்டுவது என்று உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு உருத்திரகு மாரன், ஒவ்வொருவரையும் அவரவர் கருத்துக் களை பிரதமர்பணிமனைக்கு அனுப்பி வைக்கு மாறு கூறினார். மேலும் தமிழ்பொதுவேட்பாளர் அறிவிக்கப்பட்ட உடன் வேலைத் திட்டம் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப் படும் என்றும் கூறினார்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.